# கவிதாஞ்சலி

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG
MADURAI
906

நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை

கவிஞர் பதிப்பகம்

ராஜ வீதி — கோயமுத்தூர்

முதற் பதிப்பு — ஜூலை 1956
விலை ... ரூ. 1—8—0

12726
031:1M88x
J6

# பதிப்புரை

பல ஆண்டுகட்கு முன் மாணவரும் மற்றவரும் கொள்கை வேறுபாடின்று படித்து அஞ்சலிக்க வந்த "பிரார்த்தனை" என்ற புஸ்தகத்தின் மறு பதிப்பே "கவிதாஞ்சலி" என்ற பெயரில் மீண்டும் வெளியிடுகிறோம். சில புதிய பாடல்களும் இத்துடன் இணைந்துள்ளன. நாமக்கல் கவிஞரின் பல புதிய நூல்கள் விரைவில் வெளிவரும். தமிழ் அன்பர்கள் ஆதரவு நிச்சயம் கிடைக்குமென நம்புகிறோம்.

கவிஞர் பதிப்பகத்தார்

வேளாள அச்சுக்கூடம்,
கோவை.

# உள்ளடக்கம்

UNIVERS
MADURAI

| பாட்டின் தலைப்பு | பக்க எண் |
|---|---|
| சூரியன் வருவது யாராலே ? | 6 |
| பரமன் | 7 |
| கடவுள் | 8 |
| இறைவன் | 9 |
| சொல்வதற்கு முடியாத சக்தி | 10 |
| ஒரு நாளைக்கு ஒருதரம் | 11 |
| சக்தி வணக்கம் | 13 |
| முருகனென்ற சிறுவன் | 15 |
| முருகன்மேற் காதல் | 17 |
| கண்ணன் உறவு | 19 |
| வருவாய் முருகா ! | 21 |
| கடவுளை அறிந்தவர்கள் | 22 |
| திருமுடி சூட்டிடுவோம் | 23 |
| இணையில்லாக் கொடி | 24 |
| புத்தாண்டு வணக்கம் | 25 |
| சத்தியம் மறந்தனை | 26 |
| உண்மை வளர்ந்திடாமல் | 27 |
| புது வாழ்வு | 28 |
| கவிஞன் கனவு | 32 |
| சாந்த காந்தி சங்கநாதம் | 34 |
| தமிழன் என்று சொல்லடா | 36 |
| இளந் தமிழா | 39 |
| தமிழன் உள்ளம் | 43 |

| பாட்டின் தலைப்பு | பக்க எண் |
|---|---|
| என்னுடை நாடு | 46 |
| நாட்டை மறந்தனை மனமே | 48 |
| தேறிய தெளிவு | 52 |
| தமிழ்ப்பணி | 54 |
| ஆண்மை | 56 |
| ஆடு ராட்டே | 57 |
| புரட்சி வேண்டும் | 60 |
| புதிய சமுதாயம் | 62 |
| பூமிதான யாத்திரை | 63 |
| எது வேண்டும் | 68 |
| யார் தொண்டன் | 70 |
| அமிழ்தத் தமிழ் மொழி | 72 |
| அன்பு | 76 |
| பொங்குக புதுவளம் | 80 |
| உத்தமன் காந்தி | 83 |
| கவி தாகூர் | 85 |
| வீரத் துறவி | 88 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் | 90 |
| ஜவஹர்லால் நேரு | 93 |
| கம்பனும் வால்மீகியும் | 95 |
| இயேசு கிறிஸ்து | 96 |
| உ. வே. சாமிநாதஐயர் | 97 |
| தமிழ் நாடு வாழ்க | 100 |


★

# கவிதாஞ்சலி.

UNIVERSITY EXTENSION
MADURAI

★

## சூரியன் வருவது யாராலே ?

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவைஎன்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
அதைநாம் எண்ணிட வேண்டாமோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவைஎல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோஒரு விசை இருக்குமன்றோ?

எத்தனை மிருகம்! எத்தனை மீன்!
எத்தனை ஊர்வன பறப்பன பார்!
எத்தனைப் பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனையும் தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அல்லா வென்பார் சிலபேர்கள்
அரன்அரி யென்பார் சிலபேர்கள்
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லா மிப்படி பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைத்து
அனைவரும் அன்பாய் குலவிடுவோம்
எந்தப்படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

★

## ப ர ம ன்.

உலகெலாம் படைத்துக் காத்தே
உருவிலா தழித்த நாளும்
உண்மையாய் எண்ண மாளா
ஒருவனாய் அருவ னாகிச்
சலமிலா தெண்ணு வோர்க்குச்
சத்திய மயமே யாகித்
தனித்தனி பிரிந்த போதும்
தானதிற் பிரியா னாகி
மலரின்மேல் தேவ னாகி
மாதொரு பாக னாகி
மாலொடு புத்த னாகி
மகம்மதாய் ஏசு வாகிப்
பலபல தெய்வ மாகிப்
பற்பல மதங்க ளாகிப்
பக்குவப் படியே தோன்றும்
பரமனார் பெருமை போற்றி!

★

## கடவுள்.

இல்லாத கால மில்லை
இருக்கின்ற பொருளொன் றில்லை
எண்ணாத எண்ண மெல்லாம்
எண்ணியும் எட்ட வில்லை
சொல்லாத வேத மெல்லாம்
சொல்லியும் சொன்ன தில்லை
சூட்டாத நாமம் இல்லை
தோன்றாத உருவ மில்லை
அல்லாவாய் புத்த னாகி
அரனரி பிரம்ம னாகி
அருளுடைச் சமணர் தேவும்
அன்புள்ள கிறிஸ்து வாகிக்
கல்லாத மனத்திற் கூடக்
காணாமல் இருப்பா ரந்தக்
கடவுளென் றுலகம் போற்றும்
கருணையைக் கருத்தில் வைப்பாம்.

★

## இறைவன்.

அன்பினுக் கன்பாய் வந்து
அறிவினுக் கறிவாய் நின்று
அறிந்தவர்க் கெளிய ளுகி
அல்லவர்க் கரிய ளுகி
முன்பினும் நடுவொன் றின்றி
முதுமறை தனக்கு மெட்டான்
மூடர்கள் மனத்திற் கூட
மூலையில் ஒதுங்கி நின்று
செம்பினும் கல்லி ளுலும்
செய்தவை எல்லா மாகிச்
சிலந்திபோற் கூடு கட்டிச்
சிலுவையில் மறைந்தான் போல
என்பினுக் கென்பா யென்றும்
எம்முளே விளங்கு கின்ற
எழுஞ்சுடர் சோதி யான
இறைவனே இறைஞ்சி நிற்பாம்.

★

## சொல்வதற்கு முடியாத சக்தி.

இல்லையென்று சொல்வ தற்கும்
இருக்கின்ற ஒரு பொருளாய்
இருப்ப தென்பார் ருசுப்படுத்த
இல்லாத தும் அதுவாய்
அல்ல வென்று மறுப்பதிலும்
அங்கிருந்து பேசு வதாய்
ஆம்என்ற மாத் திரத்தில்
அறிந்துவிட முடி யாதாய்
வல்லமென்று அகங் கரித்தால்
பலங்குறைக்கும் வல்ல மையாய்
வணங்கி அதைத் தொழுவார்க்கு
வலுவில்வரும் பெருந் துணையாய்
சொல்லையொத்து செயல் மனமும்
தூயவர்க்கே தோற்று வதாய்ச்
சொல்வதற்கு முடி யாத
சக்திதனைத் தொழுதி டுவோம்.

★

## ஒரு நாளைக்கு ஒரு தரம்.

பல்லவி.

ஒரு நாளைக் கொருதரம்
ஒரு நொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்த வனை
எண்ணிச் சுகித்ததுண்டோ—மனமே (ஒரு)

துணைப் பல்லவி.

திருநாளும் தேரும் என்று
தேடி அலைந்த தல்ல
சிந்தனை அலை யாமல்
தியானத்தில் நிறுத்தியே. (ஒரு)

சரணம்.

விடியுமுன் விழித் தனை
வெளுக்குமுன் வீட்டைவிட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு
வௌவால்போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும் சோர்ந்து
ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதும் கூட
எண்ணம் நினைப்பதில்லை. (ஒரு)

அரைக் காசுக் காலும்
ஒருநாள் முழுதுங் காப்பாய்
ஆயிரம் பேரை யேனும்
அலுப்பின்றிப் போய்ப் பார்ப்பாய்

உரைப்பார் உரைகட் கெல்லாம்
உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப் பவனை
எண்ணிட நேரமில்லை (ஒரு)

சில நாளைக் கதிகாரம்
செய்யும் ஒருவர்க் கஞ்சி
செய்யச் சொல்வதை எல்லாம்
செய்வாய் நீ பல்லைக்கெஞ்சி
பலநாளும் ஜென்ம மெல்லாம்
பாலிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும்
ஒரு கணம் உனக்கில்லை. (ஒரு)

நாளும் கிழமை என்று
நல்லவர் உரைத்தாலும்
"நாளைக்கு ஆகட்டும்
வேலை அதிகம்" என்பாய்
பாழும் பணத்தைத் தேடி
படும்பாடு கணக்கில்லை
பகவானை எண்ண மட்டும்
அவகாசம் உனக்கில்லை. (ஒரு)

★

## சக்தி வணக்கம்.

பல்லவி.

சக்தி எனக்கே
அருள்வாய் – பரா
சக்தி என் தாயுனை
நித்தமும் தொழுதனன் (சக்தி)

சரணம்.

பக்தியோ டுந்தனை
பணிந்திடல் மறந்தேன்
பாரினிற் சுகமெலாம்
நீயெனத் தெரிந்தேன்
இத்தின முதலுந்தன்
இணையடி புரிந்தேன்
இனிமேற் பிணியில்லை
கவலைகள் துறந்தேன். (சக்தி)

நோய்களைத் தடுத்திட
நுண்ணிய அறிவும்
நொந்தவர் தங்களைக்
காத்திடப் பரிவும்
மாய்வதைக் குறைத்திட
மருந்துகள் முறிவும்
மந்திர தந்திர
மணியவை தெரியும் (சக்தி)

கல்லினும் கட்டுடைய
 தேகம்எனக் கருள்வாய்
காலனை வென்றிடும்
 கருணையும் தருவாய்
சொல்லிலும் செயலிலும்
 தூய்மையைத் தருவாய்
சோம்பலை ஓட்டிநற்
 சுகமெனக் கருள்வாய். (சக்தி)

புண்ணிய பாபமெந்தன்
 இச்சையிற் கடந்து
பூதங்கள் ஐந்துமெந்தன்
 சொற்படி நடந்து
எண்ணிய யாவுமெந்தன்
 எண்ணம்போல் முடிய
ஈன்றவளே உந்தன்
 அருள்வரத் தடையோ? (சக்தி)

★

## முருகனென்ற சிறுவன்

முருகனென்ற சிறுவன்வந்து
முணுமுணுத்த சொல்லினுல்
முன்னிருந்த எண்ணம்யாவும்
பின்னமுற்றுப் போனதே
அருகுவந்து மனமுவந்து
அவனுரைத்த ஒன்றினுல்
அடிமையென் மனத்திருந்த
அச்சமற்றுப் போனதே!

இளமையந்த முருகன்வந்து
என்னெடொன்று சொல்லவே
என்னுளத்திருந்த பந்தம்
ஏதுமற்றுப் போனதே
வளமையுற்று இளமைபெற்று
வலிமிகுந்த தென்னவே
வந்ததே சுதந்தரத்தில்
வாஞ்சையென்ற ஞானமே!

அழகனந்த முருகன்வந்தென்
அருகிருந்த போதிலே
ஐம்புலன்களுக் கொடுங்கி
அஞ்சியஞ்சி அஞ்சிநான்
பழமையென் உடற்கண்வைத்த
பற்றுயாவும் அற்றதால்
பாரிலென்னை யாருங்கண்டு
பணியுமாறு செய்ததே!

அன்பனந்த முருகன்வந்
    தழைத்திருத்தி என்னையே
அஞ்சல்அஞ்சல் அஞ்சலென்
    றகங்குழைந்து சொன்னதால்
துன்பமிக்க அடிமைவாழ்வில்
    தோய்ந்திருந்த என்மனம்
சோகம்விட்டு விடுதலைக்கு
    மோகமுற்று விட்டதே!

★

## முருகன்மேற் காதல்.

முருக னென்ற பெயர் சொன்னல் – தோழி!
உருகுதெந்த னுளம் என்னே!
பெருகி நீர்விழிகள் சோர – மனம்
பித்து கொள்ளுதுள் ளூர

கந்த னென்று சொலும் முன்னே – என்
சிந்தை துள்ளுவது என்னே!
உந்தும் பேச்சுரைகள் உளறி - வாய்
ஊமையாகு துளம் குளிர.

வேலனென்ற பெயர் கேட்டு – ஏனே
வேர்வை கொட்டுததன் பாட்டில்
காலனென்ற பயம் ஓடி – புது
களி சிறக்குதடி சேடி.

குமரனென்ற ஒரு சத்தம் – கேட்டு
குளிர வந்ததடி சித்தம்
அமர வாழ்வு பெறல் ஆனேன் – இனி
அடிமை யார்க்குமிலே நானே!

குகனெனச் சொல்வதற் குள்ளே – நான்
அகம் மறந்தேன் அது கள்ளோ!
தகதக வென்றொரு காட்சி – உடன்
தண்ணென முன்வரல் ஆச்சு.

ஆடும் மயிலில் வரக் கண்டேன் – சொல்ல
அழகு அதைவிட ஒன்றுண்டோ
வீடுவாசல் பொருள் எல்லாம் – துச்சம்
விட்டு மறந்தனடி நல்லாள்.

பச்சை குழந்தையவன் மேலே – எந்தன்
பற்று மிகுந்த தெதனலே?
இச்சையார மிகத் தழுவி – நானும்
இணங்கி யிருந்தனின்பம் முழுகி.

கள்ளங் கபடமற்ற பாலன் – மேலே
காதல் கொண்ட என்னை ஞாலம்
எள்ளி ஏளனம் செய்தாலும் – நான்
எதற்கு மஞ்சிலன்எக் காலும்.

முருகன் கந்தன் வடிவேலன் – ஞான
திருகுகன் குமரன் சீலன்
சிறு குழந்தை யானலும் – அவனை
திருமணம் புரிவன் மேலும்.

வேறு பெயரைச் சொன்னலும் – சற்றும்
விரும்ப மாட்டெனெந்த நாளும்
தூறு பேசுவதை விட்டு – எனக்குத்
துணைபுரி முருகனைக் கட்ட.

★

## கண்ணன் உறவு.

கண்ணன் உறவைப் பிரியாதே
காரியமின்றித் திரியாதே
எண்ணம் தூயது என்ருனல்
எதுசெய் தாலும் நன்ருகும்

ஊக்கமும் உறுதியும் உண்டாகும்
உழைப்பிலும் களைப்பெதும் அண்டாது
ஆக்கமும் ஆற்றலும் பெறலாகும்
ஆயன் கண்ணன் உறவாலே.

துன்பம் எதையும் தாங்கிடலாம்
துயரம் உடனே நீங்கிடலாம்
அன்பும் அறிவும் பெரிதாகும்
அச்சம் என்பது அரிதாகும்.

சிரிப்பும் களிப்பும் நிறைந்துவிடும்
சிடுசிடுப் பெல்லாம் மறைந்து விடும்
விருப்பம் எதுவும் சித்தி பெரும்
வித்தகக் கண்ணன் பக்தியினல்.

ஆடலும் பாடலும் மிகுந்துவிடும்
அழகன் கண்ணன் புகுந்த இடம்
ஓடலும் ஒளித்தலும் விளையாட்டாம்
ஒவ்வொரு செயலிலும் களியாட்டே.

மாடுகள் மேய்க்கும் வேலையிலும்
மகிழ்ந்திடும் கண்ணன் லீலைகளால்
பாடுபட் டுழைத்திட அஞ்சோமே
பாரினில் யாரையும் கெஞ்சோமே !

தூதுவனாகித் துணை புரிவான்
தொழும் பணைப்போலும் பணிபுரிவான்
ஏதொரு தொழிலும் இழிவல்ல
என்பது கண்ணன் வழிசொல்லும்.

எல்லா உயிர்களும் இன்பமுறும்
இன்னிசை பரப்பித் தென்புதரும்
புல்லாங் குழலை ஊதிடுவான்
பூமியில் கடமைகள் ஓதிடுவான்.

பக்தருக் கெல்லாம் அடைக்கலமாய்
பாதகர் தம்மை ஒடுக்கிடுவான்
சக்திகள் பலவும் தந்திடுவான்
சங்கடம் தீர்த்திட வந்திடுவான்.

★

## வருவாய் முருகா !

வாவா முருகா ! வடிவேல் முருகா !
காவாய் முருகா ! கடிதே முருகா !
தேவா உனையே தினமும் தொழுவேன்
தீவாய்ப் பிணியைத் தீர்த்தினமே.

அழியா அழகா ! அறிவாம் முருகா !
கழியா இளமைக் கடலே முருகா!
மொழியா இன்பம் அடையும் முறையை
ஒளியா தருள்வாய் ஒருவா முருகா !

குறையா அழகே ! குமரா ! முருகா !
மறையா வையுமே அறியா ஒருவா !
சிறைவா யுலகில் சிறுகும் எளியேன்
சிறுகா விதமுன் திறமே தருவாய்

தளரா உடலும் சலியா உயிரும்
குளரு உரையும் குறையா அறிவும்
வளரா வாடா வடிவம் உடையாய்!
எளியாய்! அடியார் களியே! ஒளியே!

நரையும் திரையும் நணுகா முருகா
கரையும் பிணியும் களையொன் றறியாய்
விரியும் உலகின் விரையே முருகா!
வருவாய் முருகா வரமே தருவாய் !

★

## கடவுளை அறிந்தவர்

பல்லவி.

அவரே கடவுளை அறிந்தவராவர்
அனைவரும் மதித்திடத் தகுந்தவராவர் (அவரே)

சரணம்.

துன்பப் படுவோர் துயரம் சகியார்
துடிதுடித் தோடி துணைசெயப் புகுவார்
இன்பம் தனக்கென எதையும் வேண்டார்
யாவரும் சுகப்பட சேவைகள் பூண்டார் (அவரே)

பசியால் வாடின எவரையும் பார்த்து
பட்டினி தமக்கென பரிதபித் தார்த்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண் உபசாரம் விளம்புதல் விடுப்பார் (அவரே)

நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தம்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தானிருந் துதவும். (அவரே)

★

## திருமுடி சூட்டிடுவோம்.

பல்லவி

திருமுடி சூட்டிடுவோம்
தெய்வத் தமிழ் மொழிக்கு (திரு)

துணைப் பல்லவி.

வருமொழி எவருக்கும் வாரிக் கொடுத்துதவி
வண்மை மிகுந்த தமிழ் உண்மை உலகறிய (திரு)

சரணம்

பெற்றவளை இகழ்ந்து மற்றவரைத் தொழுத
பேதமை செய்துவிட்டோம் ஆதலினால் நம்அன்னை
உற்ற அரசிழந்து உரிமை பெருமை குன்றி
உள்ளம் வருந்தினதால் பிள்ளைகள் சீர்குலைந்தோம் (திரு)

அன்னையை மீட்டும் அவள் அரியணை மீதிருத்தி
அகிலம் முழுதும் அவள் மகிமை விளங்கச் செய்வோம்
முன்னைப் பெருமைவந்து இன்னும் புதுமைபெற்று
முத்தமிழ் செல்வியவள் சித்தம் குளிர்ந்திடவே. (திரு)

தாயின் மனம் குளிர்ந்தால் தவம்அதுவே நமக்கு
தாரணி தன்னில் நம்மை யாரினிமேல் இகழ்வார்
நோயும் நொடியும்விட்டு நுண்ணறிவோடு நல்ல
நூலும் கலைகள் எல்லாம் மேலும்மேலும் வளர்ப்போம் (திரு)

★

## இணையில்லாக் கொடி.

இந்திய நாட்டின் இணையிலாக் கொடியே
இயங்குவாய் என்றும் வயங்கொளி பரப்பி
தந்திரம் மோசம் தன்னலம் கருதா
சத்தியம் நிறைந்த உத்தம வாழ்வின்
எந்திரப்பேயின் இறுமாப் பழித்து
ஏழ்மையும் தாழ்மையும் இல்லாதொழித்து
சந்திர சூரியர் வந்துபோம் வரையிலும்
தன்னர சாட்சியின் சின்னமாய் நிற்பாய்!

பாரதநாட்டின் பங்கையிலாக் கொடியே!
பன்னலம் மிகுந்த உன்னுடை நிழலில்
ஊரெலாம் செழித்து உயிரெலாம் களித்து
யாரொடும் எவரும் அன்பே அறமென
பாரிடைக் கடவுள் படைத்தன பொருள்கள்
பங்கிட மூளும் பகைத் திறம்குன்றி
நேரிய வாழ்வில் நியாயம் நிலவிடும்
நீதிசேர் அரசின் ஜோதியாய் நிற்பாய்!

ஆருயிர் நாட்டின் அரசியற் கொடியே!
ஐம்புலன் வென்று செம்பொருள் கண்ட
வீரிய ஞான வித்தகர் தங்கி
வேதம் வளர்த்த இமய மலையின்
ஊரிய மனிதன் உளம்மிக மகிழ
உன்னதச் சிகரத் துச்சியில் நின்று
பாருள யாரும் பணிந் திடுமாறு
பற்பல ஊழி பறந்திடு வாயே!

★

## புத்தாண்டு வணக்கம்.

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தமிழ்த்
தெய்வம் திகழும் திரு நாட்டில்
இத்தினம் அந்தத் திருநாள் ஆதலின்
ஈசனைப் போற்றி வரம் கேட்போம்.

கொல்லா நோன்புடன் பொய்யா விரதம்
கொண்ட தமிழ்க் குணம் குன்ருமல்
எல்லா மக்களும் இன்புறக் கோரிடும்
எண்ணம் வளர்த்திடப் பண்ணிடுவோம்.

வீரப் படைகளின் தோள்வலியும் முன்னே
வெற்றிகள் கண்டிட்ட வாள் வலியும்
போரில் பயன் படமாட்டா என்கிற
புத்தியை எங்கும் புகட்டிடு வோம்.

கோபத்தை மூட்டிடும் பேச்சுகளும் வெறும்
குற்றங்கள் சாட்டிடும் ஏச்சுகளும்
தாபத்தை நீடிக்கச் செய்யுமல்லால் வேறு
தந்திடும் நன்மைகள் ஒன்றுமில்லை.

வள்ளல் மகாத்மா காந்தியின் வாழ்வே
வள்ளுவன் தந்த திருக் குறளாம்
தெள்ளிய உண்மையைத் தேர்ந்து நடத்திடத்
தெய்வத் திருவருள் நாடிடு வோம்.

உலகத்தில் போர்பயம் நீங்கிடவும் மக்கள்
உள்ளத்தில் அன்பறம் ஓங்கிடவும்
சுலபத்தில் கண்டு சுகம்பெறக் காந்தியை
சுதினத்தில் வாழ்த்தித் தொழுதிடு வோம்.

★

## சத்தியம் மறந்தனே.

பல்லவி

சத்தியம் மறந்தனே சாந்தம் குறைந்தனே
சத்யாக்ரஹம் விட்டு மனமே!

துணைப் பல்லவி

உத்தம வழியினை உலகினுக் குணர்த்திட
உன்னை யன்றோ நம்பி யிருந்தேன்.

சரணம்

உடல்பொருள் ஆவியும் உண்மைக்குத் தத்தம் என்று
ஓயாமல் உரைத்தனே மனமே!
கடல்பெரும் பயன்வந்து கைகூடும் சமயத்தில்
கைவிட நினைத்தனே மனமே!

அதிகார அகந்தையை அகற்றிட வேண்டுமென்று
அதற்கென்றே முன் வந்தாய் மனமே!
சதிகாரருடன் சேர்ந்து அதிகார வெறிகொண்டு
சங்கற்பம் மறந்தனே மனமே!

அன்பின் வழிநடந்து அறங்கள் நிலைநிறுத்த
அர்ப்பணம் நான் என்றாய் மனமே!
துன்பம் மிகக் கொடுக்கும் ஆசைகள் தூண்டிட
தூய்மையிற் குறைந்தனே மனமே!

★

## உண்மை வளர்ந்திடாமல்.

பல்லவி

உண்மை வளர்ந்திடாமல் ஒழுக்கம் உயர்ந்திடாமல்
உண்டோ சுதந்திரமே ! (உண்)

துணை பல்லவி

பெண்மை நிறைந்த வெறும் பேதைகள் பக்தியென்ற
பேச்சுக்கோ அளவில்லை சீச்சீஇதென்ன தொல்லை (உண்)

சரணம்

அதிகாரம் செலுத்திடும் ஆசை மிகவுமுண்டு
அதனாலே பணம்சேர்க்கும் ஆத்திரமே கொண்டு
எரிகின்ற வீட்டிலே எடுத்தது லாபமென்னும்
எண்ண முடையவர்க்கு நண்ணுமோ சுதந்திரம் (உண்)

நாவினிற் சுதந்திரம் நாட்டம் பணத்தில்குறி
நல்லதோ பொல்லாதோ வந்தவரையில் சரி
பாவ புண்ணியமெல்லாம் பண்டைக் காலத்துப்பேச்சு
பாதகம் குறையாமல் பாவனை எதற்காச்சு (உண்)

சாத்திரம் வேதமெல்லாம் நாத்திரத் தாடுது
சாமிகள் கோவிலிலே தாமங்கே வாடுது
மாத்திரை அளவேனும் மனதில் நினைவில்லார்க்கு
மங்கள சுதந்தரம் எங்கே வருமவர்க்கு (உண்)

★

## புது வாழ்வு.

புதுவாழ்வு வரவேணும்
வரவேணும் எங்கள்
பொதுவாழ்வு பலமுற்றுத்
தரவேணும் புகழே !

தமிழ்நாட்டின் மனைதோறும்
புதுவாழ்வு வந்து
தனியான தருமத்தின்
சுகமுற்றும் தந்து
அமிழ்தான மொழிபேசி
அகிலத்தில் காணும்
அனைவோரும் உறவாக
அதுசெய்ய வேணும்
நமதான இந்நாடு
நமதாக வென்றே
நாளோடு கோளுதை
பணிசெய்து நின்றே
சமமாக எல்லாரும்
நல்வாழ்வு பெறவே
சரியான வழிகாண
உபகாரம் அதுவாம்.

புவிமீது வெகுகாலம்
புகழோடு நின்றோம்

புலவர்கள் துதிபாடும்
பெருவாழ்வு கண்டோம்
தவமாதி அறமான
தரணிக்குத் தந்தோம்
தலையாய கலைவாணர்
வமிசத்தில் வந்தோம்.
அவமானம் மிகுகின்ற
அடிமைத் தனத்தால்
அநியாய சிறுமைக்குள்
அடைபட் டிளைத்தோம்
நவஜீவன் அதுபெற
புதுவீறு கொள்வோம்
நாமார்க்கும் குடியல்ல
எனுமாறு சொல்வோம்.

அதிகாலை எழுகின்ற
கதிரோன்தன் உறவால்
அலர்கின்ற மலர்போல
புதுவாழ்வு பெறுவோம்
புதிதான உணர்வோடு
உலகத்தில் எங்கும்
புலனாகும் கலையாவும்
நிலையாக இங்கும்
விதிகூட வழிவிட்டு
விலகிற்று எனவே
விதமாக விதமாக
விரிகின்ற நினைவால்

இதமாக எல்லாரும்
இனிதாக வாழ்வோம்
என்கின்ற கலைசொல்லும்
மன்றங்கள் சூழ்வோம்.

மரணத்தில் அஞ்சாத
மனவீரம் வேண்டும்
மனதுக்குள் மருளாத
மதிசாந்தம் வேண்டும்
இரணத்தை எண்ணுமை
எவருக்கும் வேண்டும்
இழிவான மொழிபேசி
களியாமை வேண்டும்.
திரணத்தின் அளவாக
போகங்கள் எண்ணி
தேசத்தின் பொதுவாழ்வின்
சேவைகள் பண்ணும்
அரண்ஒத்த நிலையான
அறிமின்னும் வளர
அறிவான புதுவாழ்வு
வரவேணும் குளிர.

அறிவோடு திறனோடு
அன்போடு கூடி
அருளோடு உறவான
புதுவாழ்வை நாடி
செறிவோடு நிறைவாக
இந்நாட்டில் யாரும்

சிறுவாழ்வு இதுபோக
பெருவாழ்வு சேரும்
துறவோடு பொதுவாழ்வின்
துயர்நீங்க மிக்கத்
துணிவோடு பணிசெய்து
துணையாக நிற்கும்
குறியோடு புதுவாழ்வு
அதுபெற்று விட்டால்
குறையேதும் இனியில்லை
சுகமுற்று விட்டோம்.

★

## கவிஞன் கனவு.

கவிபாடிக் கவிபாடிக்
காலம் கழிப்பேன்
கவலைகள் யாவையும்
விட்டு ஒழிப்பேன்
புவிநாடும் இன்பத்தில்
நிம்மதி இல்லை
பூமிக் கப்பாலுள்ள
இன்பங்கள் சொல்லும். (கவி)

கண்ணுக்குத் தெரியாத
காட்சிகள் காண்பேன்
காதுக்குக் கேளாத
கீதங்கள் கேட்பேன்
எண்ணிக்கை யில்லாத
இன்பங்கள் நுகர்வேன்
எல்லாரும் இன்புற
எங்கெங்கும் பகர்வேன்.

மூக்கென்றும் முகராத
வாசங்கள் மோப்பேன்
முன்னென்றும் தெரியாத
நன்னயம் பூப்பேன்
நாக்கென்றும் அறியாத
நற்சுவை புசிப்பேன்
நலிசெய்யும் பசியற்ற
நாட்டிடை வசிப்பேன்.

உடலத்தில் புதுப்புது
உணர்ச்சிகள் பொங்கும்
உள்ளத்தில் உண்மையும்
ஞானமும் தங்கும்
சடலத்தைப் பெரிதென்றும்
உலகத்தை மறப்பேன்
சத்திய நித்திய
வானத்தில் பறப்பேன்.

ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் முன்னே
அப்படியே பல
ஆண்டுகள் பின்னே
போயின வருவன
காட்சிகள் தெரியும்
புதுமையிற் குறையாமல்
என்முன்னே விரியும்.

தூரமும் காலமும்
துச்சங் களாகும்
துன்பமும் இன்பமும்
தொண்டுசெய் தேகும்
நேரமும்கிரகம் என்
நினைவின் படிக்கே
நின்றெந்தன் ஏவலை
செய்து முடிக்கும்.

*

## சாந்த காந்தி சங்கநாதம்.

சாந்தகாந்தி சத்தியத்தின்
சங்கநாதம் கேட்குது
ஆய்ந்துபார்க்கத் தேவைஇல்லை
அதிலிருக்கும் நன்மையை
மாந்தருக்குள் சமுகவாழ்வு
மாறுமிந்த பொழுதிலே
சோர்ந்திடாமல் நமதுநாட்டை
துயிலெழுப்பும் ஓசையாம்.

இடிஇடித்து மின்னல்மின்னி
இருள்கவிந்து எங்கணும்
கிடுகிடுத்து உலகமெங்கும்
கிலிபிடித்த வேளையில்
குடுகுடுத்த கிழவர்காந்தி
குமரர்நாணக் கூவினர்
துடிதுடித்து உண்மைபோற்றும்
தொண்டர்யாரும் கூடுவோம்.

வீடுபற்றி வேகும்போது
வீணைமீட்டும் வீணர்போல்
நாடுமுற்றும் புதியவாழ்வை
நாடுகின்ற நாளிலே
பாடுமிக்க சேவைவிட்டுப்
பதவிமோகம் பற்றினல்
கேடுஎன்ற எச்சரிக்கை
கிழவர்காந்தி கூக்குரல்.

கடல்கலங்கப் புயலடித்துத்
    தத்தளிக்கும் கப்பலின்
திடமிகுந்து தெளிவுகொண்ட
    திசையறிந்த மாலுமி
இடமறிந்து காலம்கற்ற
    இந்தநாட்டின் மந்திரி
கடனறிந்த காந்திபோதம்
    கவலைபோக்கும் மந்திரம்.

கர்மவீரன் காந்திஎன்னும்
    காளமேகம் கர்ஜனை
தர்மமான மழைபொழிந்து
    தரணிமுற்றும் குளிரவே
வர்மமான வார்த்தையாவும்
    வாதுசூது செய்திடும்
மர்மமான எதையும்விட்ட
    ராஜமார்க்கம் மதிதரும்.

வீரமென்றும் சூரமென்றும்
    வெறிகொடுக்கும் பேச்சினல்
காரமுள்ள வார்த்தையாவும்
    யாரைஎன்ன செய்திடும்
தீரர்ஞான காந்திசங்கம்
    திசைமுழங்கக் கேட்குது
சேரவாரும் மனிதவாழ்க்கை
    சீர்திருத்த வேண்டுவோர்.

★

## தமிழன் என்று சொல்லடா !

பல்லவி

தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா !

அமுதமூறும் அன்புகொண்டு
அரசுசெய்த நாட்டிலே
அடிமைஎன்று பிறர்நகைக்க
முடிவணங்கி நிற்பதோ !
இமயம்தொட்டுக் குமரிமட்டும்
இசைபரந்த மக்கள்நாம்
இனியும்அந்தப் பெருமைகொள்ள
ஏற்றயாவும் செய்குவோம். (தமிழ)

குஞ்சைக்காக்கும் கோழிபோலக்
குடியைக்காத்த மன்னர்கள்
கோல்நடத்த அச்சமின்றி
மேல்நினைப்பு கொண்டுநாம்
பஞ்சபூத தத்துவங்கள்
பக்தியோடு முக்தியைப்
பார்சிறக்கச் சொன்னநாமும்
சீர்குறைந்து போவதோ ? (தமிழ)

உலகிலெங்கும் இணையிலாத
உண்மைபாடும் புலவர்கள்
உணர்ச்சிதன்னை வானைத்தாண்டி
உயரச்செய்யும் நாவலர்

கலகமற்றுக் களிசிறக்கக்
    கவிதைசொன்ன நாட்டிலே
கைகுவித்துப் பொய்கள்பாடிக்
    காலந்தள்ளல் ஆகுமோ ? (தமிழ)

கங்கையோடு பெருமைகொண்ட
    காவிரிப்பொன் னாட்டிலே
கவலையின்றி சோறிருக்கக்
    கலைகள்எண்ணி வாழ்ந்தநாம்
மங்கிமங்கி வறுமைமிஞ்ச
    மதிமயங்கி மாய்வதோ !
மாநிலத்தில் சோற்றுப்பஞ்சம்
    மறையுமாறு மாற்றுவோம். (தமிழ)

சித்திரத்தில் மிகஉயர்ந்த
    சிற்பநூலின் அற்புதம்
சின்னசின்ன ஊரிற்கூட
    இன்னுமெங்கும் காணலாம்
கைத்திறத்தில் ஈடிலாத
    கல்விதந்த தமிழர்நாம்
கைநெரித்து வேலையின்றிக்
    கண்கலங்கி நிற்பதேன் ? (தமிழ)

எண்ணமற்று விசனமற்று
    எங்கும்செல்வம் பொங்கவே
எந்தநாளும் ஆடல்பாடல்
    எழிலரங்கம் ஓவியம்

பண்ணமைந்த குழலும்யாழும்
பக்கமேளம் யாவையும்
பாருக்கீந்து மகிழ்ச்சியின்றி
நாமிருத்தல் பான்மையோ! (தமிழ)

விண்மறைக்கும் கோபுரங்கள்
வினைமறக்கும் கோயில்கள்
வேறுஎந்த நாட்டிலுண்டு
வேலையின் விசித்திரம்
கண்ணிறைந்த காவனங்கள்
கனிகள்மிக்க சோலைகள்
கண்டபோது பண்டைஎங்கள்
நாகரீகம் காட்டுமே! (தமிழ)

மனிதவாழ்வில் இன்பமென்று
சொல்லுகின்ற யாவையும்
மற்றவாழ்வில் உதவுமென்று
நம்புகின்ற ஞானமும்
தனிமையான முறையில்யார்க்கும்
தந்ததிந்த தமிழகம்
தட்டிடாது தெய்வமின்னும்
கிட்டிநம்மைக் காக்குமே! (தமிழ)

★

## இளந் தமிழா !

இளந்தமிழா ! உன்னைக்காண
இன்பமிக்கப் பெருகுது
இதுவரைக்கும் எனக்கிருந்த
துன்பம்சற்றுக் குறையுது
வளந்திகழும் வடிவினோடும்
வலிமைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமைநிற்கு
வந்தஊக்கம் கண்டுநான்

தளர்ந்திருந்த சோகம்விட்டுத்
தைரியம் கொண்டேனடா
தமிழர்நாட்டின் மேன்மைமீளத்
தக்ககாலம் வந்ததோ !
குளிர்ந்தஎந்தன் உள்ளம்போல
குறைவிலாது நின்றுநீ
குற்றமற்ற சேவைசெய்து
கொற்றமோங்கி வாழுவாய் !

பண்டிருந்தார் சேரசோழ
பாண்டிமன்னர் நினைவெல்லாம்
பாயுதடா உன்னையின்று
பார்க்கும்போது நெஞ்சினில்
கொண்டகொள்கை அறம்விடாமல்
உயிர்கொடுத்த வீரர்கள்
கோடிகோடி தமிழர்வாழ்ந்த
கதைகள்வந்து குத்துது !

மண்டலத்தே இணையிலாத
வாழ்வுகண்ட தமிழகம்
மகிமைகெட்டு அடிமைபட்டு
மதிமயங்கி நிற்பதேன் ?
சென்டெழுந்தா லென்னபாய்ந்து
தேசமுற்றும் சுற்றிநீ
தீரவீரம்நம்முள் மீளச்
சேருமாறு சேவைசெய் !

அன்பினேடு அறிவுசேர்ந்த
ஆண்மைவேண்டும் நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின்
ஆற்றல்வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி
ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள்
என்றஎண்ணம் வேண்டுமே

துன்பமான கோடிகோடி
சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும்
துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும்
இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா என்றும்நின்று
ஏடெடுத்துப் பாடுவாய் !

பணமிருந்தார் என்பதற்காய்ப்
பணிந்திடாத மேன்மையும்
பயமுறுத்தல் என்பதற்கே
பயந்திடாத பான்மையும்
குணமிருந்தார் யாவரேனும்
போற்றுகின்ற கொள்கையும்
குற்றமுள்ளார் யாரென்றாலும்
இடித்துக்கூறும் தீரமும்

இனமிருந்தார் ஏழையென்று
கைவிடாத ஏற்றமும்
இழிகுலத்தார் என்றுசொல்லி
இகழ்ந்திடாமல் எவரையும்
மணமிருந்தே இனிமைமண்டும்
தமிழ்மொழியால் ஓதிநீ
மாநிலத்தில் எவருங்கண்டு
மகிழுமாறு சேவைசெய்.

ஓடிஓடி நாட்டிலெங்கும்
உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமைவாழ்வை
உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து
வறுமைபட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும்
வலிமைகொள்ளச் செய்குவாய்.

கூடிக்கூடிக் கதைகள்பேசிச்
செய்கையற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக்
கொள்கையோடு நின்றுநீ
பாடிப்பாடித் தமிழின்ஓசை
உலகமெங்கும் பரவவே
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப்
பணியுமாறு சேவைசெய்.

தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா!
தரணியெங்கும் இணையிலாஉன்
சரிதைகொண்டு செல்லடா
அமிழ்தமென்ற தமிழினோசை
அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண்
டாசைகொள்ளச் செய்துமேல்

கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு
நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை
செய்துவாழ்க நீண்டநாள்!

★

## தமிழன் உள்ளம்.

தமிழன் என்ெெருரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்.

அறிவின் கடலைக் கடைந்தவனும்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்.

கவிதைச் சுவைகளை வடித்தெடுத்தான்
கம்பன் பாட்டெனப் பெயர்கொடுத்தான்
புவியில் இன்பம் பகர்ந்தவெல்லாம்
புண்ணிய முறையில் நுகர்ந்திடுவான்.

'பத்தினிச் சாபம் பலித்துவிடும்'
பாரில் இம்மொழி ஒலித்திடவே
சித்திரச் சிலப்பதி காரமதை
செய்தவன் துறவுடை ஓரரசன்.

சிந்தாமணி மணி மேகலையும்
பத்துப் பாட்டெனும் சேகரமும்
நந்தா விளக்கென தமிழ்நாட்டின்
நாகரீகத்தினை மிகக் காட்டும்.

தேவாரம் திரு வாசகமும்
திகழும் சேக்கிழார் புகழும்
ஓவாப் பெருங்கதை ஆழ்வார்கள்
உரைகளும் தமிழன் வாழ்வாகும்.

தாயும் ஆனவர் சொன்னதெல்லாம்
தமிழன் ஞானம் இன்னதெனும்
பாயும் துறவுகொள் பட்டினத்தார்
பாடலும் தமிழன் பெட்பெனலாம்.

நேரெதும் நில்லா ஊக்கமுடன்
நிமிர்ந்திட அச்சம் போக்கிவிடும்
பாரதி என்னும் பெரும்புலவன்
பாடலும் தமிழன்தரும் புகழாம்.

கலைகள் யாவினும் வல்லவனும்
கற்றவர் எவர்க்கும் நல்லவனும்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனும்.

சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கேசொல்
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்.

உழவும் தொழிலும் இசைபாடும்
உண்மை சரித்திரம் அசைபோடும்
இழவில் அழுதிடும் பெண்கூட
இசையோ டழுவது கண்கூடு.

யாழும் குழலும் நாதசுரம்
யாவுள தண்ணுமை பேதமெலாம்
வாழும் கருவிகள் வகைபலவும்
வகுத்தது தமிழெனல் மிகையலவாம்.

கொல்லா விரதம் பொய்யாமை
　　கூடிய அறமே மெய்யாகும்
எல்லாப்புகழும் இவை நல்கும்
　　என்றே தமிழன் புவிசொல்லும்.

மானம் பெரிதென உயிர்விடுவான்
　　மற்றவர்க்காகத் துயர் படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
　　'தருவது மேல்'எனப் பேசிடுவான்.

ஜாதிகள் தொழிலால் உண்டெனினும்
　　சமரசம் நாட்டினில் கண்டவனும்
நீதியும் உரிமையும் அன்னியர்க்கும்
　　நிறை குறையாமல் பண்ணினவன்.

உத்தமன் காந்தியின் அருமைகளை
　　உணர்ந்தவன் தமிழன் பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்
　　சாந்தம் தவறா துடனிருந்தான்.

★

## என்னுடை நாடு.

இந்திய நாடிது என்னுடை நாடு
என்று தினந்தினம் நீயதைப் பாடு
சொந்த மில்லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி
இந்தத் தினம்முதல் "இந்திய நாடு
என்னுடை நாடெ"ன்ற எண்ணத்தைக் கூடு.

கன்னி இமயக் கடலிடை நாடு
கடவுள் எமக்கெனக் கட்டிய வீடு
என்ன முறையிது ஏனிதை வேறு
இன்னொரு நாட்டவர் ஆள்வது கூறு
சொன்னவர் கேட்டவர் யாரையும் நம்பி
சோர்ந்து கிடந்தது தீர்ந்தது தம்பி
என்னுடை நாட்டினை நானிருந் தாள
இந்தத் தினம்முதல் எண்ணுவன் மீள.

தன்னுடை வேலையைத் தான் செய்வதாலே
தப்பு வந்தாலும் சுதந்தரம் மேலே
இன்னொரு யாருக்கும் இதிலென்ன கோபம்
எந்தன் உரிமை சொன்னு லென்னபாபம்
அன்னியர் ஆள்வதில் நன்மை வந்தாலும்
அடிமையின் வாழ்வது நரகம் எந்நாளும்
என்னுடை வீட்டுக்கு நான் அதிகாரி
என்பது தான் சுயராஜ்ஜிய பேரி.

பாரத நாடெந்தன் பாட்டனின் சொத்து
பட்டயத் துக் கென்ன பஞ்சாயத்து
யாரிதை வேறொரு அன்னியர் ஆள
அஞ்சிக் கிடந்தது போனது மாள
'வாரவர் போறவர்' யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி
வீரமும் தீரமும் வெற்றுரை யாமோ
விடுதலை வேண்டுதல் விட்டிடப் போமோ.

முத்தமிழ் நாடெந்தன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்கெனப் பாடு
சற்றும் உரிமையில் லாதவர் ஆள
சரிசரி யென்றது போனது மாள
பக்தியின் அன்பினில் பணிபல செய்வோம்
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றே!

★

## நாட்டை மறந்தனை மனமே!

நாட்டை மறந்தனை மனமே
நாளுமிங் கெளியவர் வருந்தும்
பாட்டை நினைத்திலை சிறிதும்
படித்தனை யதன்பயன் இதுவோ?
பூட்டிய விலங்குடன் புலம்பும்
பெற்ற பொன்னாட்டினைப் போற்றாய்
ஏட்டிற் படித்தனை அறநூல்
ஏதும்உன் செய்கையில் இல்லை.

வேதம்வே தாந்தங்கள் வளர்ந்து
வேண்டிய வளம்முற்றும் பொருந்திப்
பூதங்கள் விபத்துகள் குறைந்து
பூமியில் இணையற்ற நாட்டில்
சாதமும் வயிற்றிற்கில் லாமல்
சாகாதும் பிணமெனத் தளர்ந்தோம்
ஏததன் காரணம் என்றே
எண்ணவும் மாட்டனை நெஞ்சே!

தன்னுயிர் போற்பிற உயிரைத்
தாங்கிய பெரியவர் வாழ்ந்து
பொன்னொளி வீசிய நாட்டின்
புகழறம் நீபிறந் தழித்தாய்
அன்னியர்க் குளவுகள் சொல்லி
அவர்தந்த எச்சிலை அருந்தி
உன்னுடன் பிறந்தவர் வருந்த
உடல்சுகித் திருந்தனை மனமே!

மாற்றலர்க் கிடங்கொடுத் தேழை
மக்களைப் பிழிந்துடல் வளர்த்தாய்
கூற்றுவன் கணக்கிடும் நாளில்
கூறுவை பதிலென்ன மனமே!
வீற்றிருந் தாண்டஉன் அரசை
விற்றுடல் சோம்பினை யினிமேல்
ஆற்றுவை இப்பழி அகற்ற
அன்னையின் விடுதலைக் கறமே.

சொந்த சுதந்திரம் மறந்தாய்
சோற்றினுக் குடல்சுமந் திருந்தாய்
பந்தம கன்றிட நினையாய்
பாரதத் தாயினைப் பாடாய்
அந்த மிலாதவள் செல்வம்
அன்னியர்க் கிழந்தனைக் குடிகள்
கந்தையும் கஞ்சியும் அற்றார்
காரணம் நீயெனக் கருதாய்.

அடிமையிற் பழகினைப் பொழுதும்
ஆண்மையை மறந்தனை முழுதும்
குடிமுறை குறைந்தனைச் சிறிதும்
குலமுறை நினைந்திலைப் பெரிதும்
மிடிமையிற் கிடந்ததுன் நாடு
மேன்மையை இகழ்ந்ததுன் வீடு
மடமையில் மயங்கியிப் பிறப்பின்
மகிமையை மறந்தனை மனமே!

கொண்டவள் குலக்கொடி வாடக்
கூத்தியர் மையலிற் குறையும்
வண்டர்கள் எனவல்ல முன்னோர்
வழக்க ஒழுக்கத்தை மறந்து
கண்டவர் சிரித்திடக் களித்து
கற்றவர் மொழிகளைப் பழித்து
அண்டிய அயலவர் மயக்கால்
அழித்தனை மனையறம் அறிவோ ?

ஜாதியை மதத்தினைப் பழித்துச்
சண்டையில் உவந்தனை மனமே
வாதுகள் மிகுந்தன நாட்டில்
வறியவர் வரிகளால் வருந்த
ஏதினி விடுதலை எனவே
யாவரும் ஏங்கினர் நல்லோர்
ஓதிய ஒற்றுமைக் குலைத்து
ஒப்புற ஒழுகுவை உயர்வாய்.

தேனுள்ள தாமரை மேலே
தினமுள்ள தவளையைப் போல
நானுள்ள இப்பெரும் நாட்டின்
ஞாலமெல் லாந்திரண் டாற்போல்
ஊனுள்ள தேகத்தி னேடும்
உன்முன்னே காந்தியொன் றுற்றும்
ஏனென்ன என்றிலை மனமே
இருந்தென்ன போயென்ன நீயே.

ஆண்டவன் உனக்கென்ற நாட்டில்
அன்னியர்க் கரசளித் தடிமை
பூண்டுடல் வளர்த்தனை நெஞ்சே
புண்ணியம் உனக்கிலை நரகே
மீண்டுமுன் நாட்டினை மீட்க
மெய்ப்பொருள் ஆவியும் ஈந்து
ஆண்டொழில் புரிகுவை யாயின்
ஆன்ம சுதந்திரம் அடைவாய்.

★

## தேறிய தெளிவு.

துன்பம் எனும் பேயே! – நீ
தூரத் தொலைந் தொழிவாய்
இன்பத்தைக் கண்டு கொண்டேன் – உனக்கு
இங்கென்ன வேலையினி ?

துக்கம் எனும் இருட்டே! – ஞான
சூரியன் தோன்றி விட்டான்
பக்கம் வருவதற்கும் – இனி
பாத்தியம் ஏதுனக்கு ?

காமக் கடுங் குறும்பே! – நெற்றிக்
கண்ணை யடைந்து விட்டேன்
தாமதம் செய்வாயேல் – வெந்து
சாம்பல் கதியடைவாய் !

கோபக் கொடுங் குணமே! – உன்றன்
கொட்டம் அடக்கிடுவேன்
தாபத்துக் கெட்டாத – தெய்வ
சன்னதி என்னதுபார் !

சோம்பல் எனும் பிணியே! – உன்றன்
சொந்தத்தை விட்டுவிட்டேன்
தேம்பித் திரிபவரை – இனி
தேடிப் பிடித்துக்கொள்ளு.

அச்சம் எனும் பகையே! – இனி
அண்டையில் நிற்பாயோ
பச்சைக் குழந்தையைப்போல் – மனப்
பாண்மை யடைந்துவிட்டேன்

ஆசை மனக்குரங்கே – உன்றன்
ஆட்சி ஒழிந்ததுபார்
காசு பணங்களெல்லாம் – வெறும்
காகிதக் குப்பைகண்டேன்.

சூதுபொய் வஞ்சனைகாள்! - உங்கள்
சூழ்ச்சி பலிக்காது
நீதிமெய் நேர்மைகளே – கொண்ட
நிச்சய ஞானமுற்றேன்.

வெற்றிஎனும் வெறியே! – உன்னை
வென்று விழுங்கிவிட்டேன்
மற்றொரு யாரினிமேல் – என்
மனதைக் கலைத்திடுவார்?

ஆறி அமர்ந்துவிட்டேன் – அருள்
ஆண்டவன் சன்னதிமுன்
தேறித் தெளிந்தஎன்னை – எந்த
தீவினை என்னசெய்யும்?

★

## தமிழ்ப் பணி.

தமிழன்னைத் திருப்பணி செய்வோம்
தரணிக்கே ஒருஅணி செய்வோம்
அமிழ்தம் தமிழ்மொழி என்றுரே !
அப்பெயர் குறைவது நன்றுமோ ?

அன்பு நிறைந்தவள் தமிழன்னை
அருளை அறிந்தவள் தமிழன்னை
இன்பக் கலைகள் யாவையுமே
ஈன்று வளர்த்திடும் தேவியவள்.

பக்தி நிறைந்தது தமிழ்மொழியே
பரமனைத் தொடர்வது தமிழ்மொழியே
சக்தி கொடுப்பவள் தமிழ்த்தாயே
சமரசம் உரைப்பவள் தமிழ்த்தாயே.

வண்மை மிகுந்திடும் மனமுடையாள்
வாய்மையை வணங்கும் இனமுடையாள்
தண்மை அளித்திடும் இலக்கியத்தாள்
தாரணி புகழ்ந்திடும் இலக்கணத்தாள்.

மாநிலம் முழுதும் ஓர்சமுதாயம்
மக்களுக் கெல்லாம் ஒருநியாயம்
தானென அறிஞர்கள் தலைவணங்கும்
தருமம் வளர்த்தவள் தமிழணங்கே.

அன்னிய மொழிகளை அருவருக்கும்
அற்பத் தனங்களை அவள்வெறுக்கும்
நன்னயம் மிகுந்தவள் தமிழ்மாதா
நாகரிகத்தின் தனித் தூதாம்.

பற்பல மொழிகளைப் பகுத்தறிந்தாள்
பாருள அறிவினைத் தொகுத்துரைப்பாள்
அற்புத மாகியமனப் பெருமை
அடங்கியதே தமிழ் தனிப்பெருமை.

மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர்போல்
மதிப்பது தமிழ்மொழி முன்னுரையாம்
தன்னலம் துறந்திடும் தகவுடையாள்
தவநெறி வாழ்க்கையின் புகழுடையாள்

அன்னிய வாழ்க்கையின் ஆசையினால்
அன்னையை மறந்தோம் நேசர்களே!
முன்னைய பெருமைகள் முற்றிலுமே
முயன்றால் தமிழகம் பெற்றிடுமே.

புதுப்புது ஒளிகளில் அலங்கரிப்போம்
பூரணம் தமிழ்எனத் துலங்கவைப்போம்
மதிப்புடன் படித்தவர் மகிழ்ந்திடுவார்
மாநிலத் தறிஞர்கள் புகழ்ந்திடுவார்.

அன்னிய மொழியே தினம்பேசி
அன்னையைப் பணிந்திட மனம்கூசி
இன்னமும் இருந்தால் தமிழ்மொழியே
இறந்திடும் உனக்கது பெரும்பழியே.

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத் துறக்காதே
'அமிழ்தம் தமிழ்மொழி' ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்.

★

## ஆண்மை.

அஞ்சாத நிலையே ஆண்மை
அஞ்சினோர்க் கருளல் ஆண்மை
கெஞ்சாத வாழ்வே ஆண்மை
கெஞ்சினோர்க் கிரங்கல் ஆண்மை
மிஞ்சாத கோபம் ஆண்மை
மிஞ்சினல் காத்தல் ஆண்மை
துஞ்சாத ஊக்கம் ஆண்மை
துன்பத்தில் துணையாம் ஆண்மை.

பொய்யாத நிலையே ஆண்மை
புகுந்தாருக் கபயம் ஆண்மை
வையாத பேச்சே ஆண்மை
வருந்தாது இருத்தல் ஆண்மை
எய்யாத சொல்லே ஆண்மை
இகழாது இடித்தல் ஆண்மை
கொய்யாது கொடுத்தல் ஆண்மை
கோள்சொல்லாக் குணமே ஆண்மை.

உள்ளதை உரைத்தல் ஆண்மை
ஒளிப்பதை ஒழித்தல் ஆண்மை
கள்ளத்தைக் கடிதல் ஆண்மை
கயமையைக் காய்தல் ஆண்மை
எள்ளொத்த துன்பம் கூட
எவருக்கும் இழைக்கா தாண்மை
வெள்ளத்தைப் போன்ற அன்பின்
வெற்றியே விரும்பும் ஆண்மை.

★

பல்லவி

ஆடுராட்டே சுழன் றுடுராட்டே

துணைப் பல்லவி

சுழன்று சுழன்று சுழன் றுடுராட்டே – இனிச்
சுகவாழ்வு வந்ததென்று ஆடுராட்டே

சரணம்

பாபம் குறையுமென்று ஆடுராட்டே – இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபம் குறையுமென்று ஆடுராட்டே – நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடுராட்டே !

மேலான ஜாதியென்று மிக்கப்பேசி – மிக
மாறுன காரியங்கள் செய்துவாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனை எல்லாம் – இனி
மாண்டு மடியுமென்று ஆடுராட்டே !

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து – மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தம்குடிசை நிழலிருந்து – நூல்
இழைத்துப் பிழைப்பரென்று ஆடுராட்டே !

கள்ளுபீர் சாராயம் காமவகைகள் – கெட்ட
கஞ்சா அபின்களெல்லாம் ஓடியொளிக்க
பிள்ளைகுட்டிப் பெண்ஜாதி வயிறுற – உண்ணப்
பெற்றதே சுதந்திரமென் றுடுராட்டே !

உழுது நெய்துபல தொழில்செய்து – பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதல்லால்
தொழுது பணிபுரியும் தொழில்களெல்லாம் – இனித்
தோல்வி யடையுமென் றுடுராட்டே.

வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார்–பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார் – குடி
சுத்தப்படு மென்று சொல்லி ஆடுராட்டே !

ஜாதிஜனக் கட்டுகளை மதிக்காமல் – நித்தம்
தானடித்த மூப்பாக வாழ்ந்ததெல்லாம்
நீதிநெறி தெய்வவழி நினைத்தினிமேல் – சுகம்
நிரம்பத் திரும்புமென்று ஆடுராட்டே !

ஆங்கிலம் படித்தோமென் றகங்கரித்துச்–சொந்தம்
அக்கம்பக்கம் யாரெனிலும் மதியாமல்
தாங்களே பெரியரென் றிருந்ததெல்லாம் – இனித்
தலை குனிந்தோடு மென்று ஆடுராட்டே !

சர்க்கார் மனிதரென்று மதிமயங்கிக் – குணம்
தக்காரெனினும் அவ மதித்தவர்கள்
சர்க்கார் ஜனங்களென்று மதிதெளிந்து –இனித்
தாழ உரைப்பரென்று ஆடுராட்டே !

படித்தம் படித்தமென்று பட்டங்காட்டி – ஏழைப்
பாமரரை ஏய்த்து வாழ்ந்தவர்க ளெல்லாம்
நடித்த நாடகங்கள் தவறென்பதைக் - கண்டு
நல்வழி நடப்பரென்று ஆடுராட்டே !

அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப்பல காலைகள் செய்ய—நாம்
காத்துக் கொள்வோம் மானமென்று ஆடுராட்டே!

12726
031:1M88:c
J6
...RSITY EXTENSION LI...

## புரட்சி வேண்டும்.

புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும்
புரட்சி வேண்டுமடா!
புரட்சி என்கிற சொல்லின் பொருளிலும்
புரட்சி வேண்டுமடா!

புத்தம் புதிதென நத்தப் படுவதைப்
புரட்சி என்றிடலாம்
நித்தம் கண்டுள சொத்தை வழிகளில்
புரட்சி நின்றிடுமோ?

மருட்சி தந்திடும் முரட்டு வார்த்தையில்
புரட்சி வந்திடுமோ?
திரட்சியாகிய மகிழ்ச்சி வாழ்க்கையைத்
தீயன தந்திடுமோ!

பொதுநலம் வந்திடப் புதுவழி தந்தால்
புரட்சி அதுவாகும்
சதிபல செய்திடும் வதிகளில் விழுவதும்
புரட்சி மதியாமோ?

வேதனை யேதரும் தீதுள நெறிபல
புரண்டு வீழ்ந்திடும்ஓர்
போதனை தந்திடும் நூதன வழிகளில்
புரட்சி சூழ்ந்திடுவோம்.

சூதுகள் அரசியல் நீதிகள் என்றிடும்
சுத்தப் பொய்யுரையை
வீதியில் சந்தியில் விழிக்க விட்டொரு
புரட்சி செய்திடுவோம்.

கொன்று குவிப்பதை வென்றி எனச்சொலும்
கொச்சை எண்ணமெல்லாம்
சென்று மறைந்தன என்றுசொல்லும் ஒரு
புரட்சி பண்ணிடுவோம்.

சண்டையும் கொலைகளும் பண்டைய நாள்முதல்
கண்டு சலித்ததடா
வண்டர்கள் வழிகளைக் கொண்ட புரட்சியில்
நன்மை பலித்திடுமோ?

தீமையி லுள்ளதும் நன்மைகள் வரினும்
தேய்ந்தவை மாய்ந்து விடும்
வாய்மையின் அன்பால் வருகிற நலமே
புரட்சி வாய்ந்ததுவாம்

உத்தமன் காந்தியின் உபதேசம் தான்
புரட்சி போதனையாம்
சத்திய நெறிதரும் சாத்விக முறையே
புரட்சி சாதனையாம்.

★

## புதிய சமுதாயம்.

பாட்டாளி மக்களின் பசி தீரவேண்டும்
பணமென்ற மோகத்தின் விசை தீரவேண்டும்
கூட்டாளி வர்க்கங்கள் குணம் மாறவேண்டும்
குற்றேவல் தொழிலென்ற மனம் மாறவேண்டும்
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டு
வேறுளோர் துன்பங்கள் கண்ணுரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாது இனியென்று நாமறிதல் பெருமை.

உடலத்தின் வடிவத்தில் பேதங்கள் உண்டு
உள்ளத்தின் எண்ணத்தில் வித்யாசம் உண்டு
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் எல்லாம்
சகலர்க்கும் உலகத்தில் சமமான தன்றோ
கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானல்
மனிதர்க்கு அறிவுள்ள ஏற்றங்கள் ஏனே?

பசைமிக்க தொழில்செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசிமிக்கு மிகநொந்த தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளு முன்னல்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்
வறுமைக்கு இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம்.

★

## பூமிதான யாத்திரை.

பூமிதானம் செய்வதே
புண்ணியத்திற் புண்ணியம்,
புனிதமான முறையில்நாட்டில்
வறுமைபோகப் பண்ணிடும்;
சாமிசாட்சி யாகஎங்கும்
சண்டைகள் குறைந்திடும்;
சரிநிகர் சமானவாழ்வு
சத்தியம் நிறைந்திடும்.

ஏழையென்றும் செல்வனென்றும்
ஏற்றத்தாழ்வு போய்விடும்:
எங்கும்யாரும் பகைமையின்றிப்
பங்குகொள்வ தாய்விடும்;
கோழையின் பொறுமைதூண்டும்
குற்றம்யாவும் நீங்கிடும்;
கொடுமையான பஞ்சம்விட்டுக்
குணநலங்கள் ஓங்கிடும்.

உடலுழைத்து உணவுமுற்றும்
உண்டுபண்ணும் உழவர்கள்
உரிமைசொல்ல நிலமிலாமல்
உள்ளம்வெந்து அழுவதா?
உடல்சுகித்து உலகினுக்கு
உதவியற்ற ஒருசிலர்
ஊரிலுள்ள பூமிமுற்றும்
உரிமைகொண்டு திரிவதா?

உலகிலுள்ள நிலமனைத்தும்
உலகநாதன் உடைமையே ;
ஊரிலுள்ள விளைநிலங்கள்
ஊர்ப்பொதுவாம் கடமையே,
கலகமின்றிச் சட்டதிட்டக்
கட்டுப்பாடும் இன்றியே
கவலையற்ற சமரசத்தின்
காட்சிகாண நன்றிதே.

காந்திதர்ம நெறியைக்காக்க
கடவுளிட்ட கட்டளை
கருணையோடு பூமிதானம்
செய்யக்கோரும் திட்டமே ;
ஆய்ந்துபார்க்கின் உலகிலெங்கும்
அமைதியற்ற காரணம்
அவரவர்க்கு நிலமிலாத
ஆத்திரத்தின் பேரில்தான்.

தானதர்ம ஆசையேநம்
தமிழகத்தின் கல்வியாம்
தந்துவக்கும் இன்பமேநம்
தலைசிறந்த செல்வமாம்
தீனருக்கு பூமிகொஞ்சம்
தானமாகத் தருவதால்
தேசமெங்கும் அமைதிபெற்றுத்
திருவிலாசம் பெருகுமே.

கும்பிவேகும் பசிமிகுந்த
கோபதாபம் என்னவே
கொடுமைசேர் புரட்சிவந்து
கொள்ளைபோகு முன்னமே
அன்பினோடு பூமிதானம்
ஆனமட்டும் செய்வதே
அச்சமின்றி நாட்டிலெங்கும்
அமைதிபெற்று உய்வதாம்.

விளைவுமுற்றும் சொந்தமாகும்
விளைநிலங்கள் தந்திடில்
வேலையற்ற கோடிமக்கள்
விளைச்சல்செய்ய முந்துவார்
களைவிழுந்து தரிசுபட்ட
கோடிகோடி காணிகள்
களிசிறக்க செழுமைபெற்றுக்
கதிர்கள்முற்றும் காணலாம்.

காந்திசொன்ன ராமராஜ்யம்
காணவல்ல தலைவனாய்
கர்ம, பக்தி, ஞானயோகம்
கருதும்புத்தி நிலையனாய்
சாந்தசத்தி யாக்ரகத்தின்
சாட்சியாகும் வினோபா
சாற்றுகின்ற பூமிதானம்
சோற்றுப்பஞ்சம் மாற்றுமே.

விரதமாகக் காந்தியண்ணல்
விட்டுப்போன வேலையை
விட்டிடாமல் கட்டிக்காக்கும்
வீறுகொண்ட சீலனாய்
பரதநாட்டின் தர்மசக்தி
பாரிலெங்கும் சூழவே
பகையிலாமல் யுத்தமென்ற
பயமிலாமல் வாழலாம்.

தெய்வஜோதி காந்தியண்ணல்
தேர்ந்தெடுத்த சீடனும்
திருவினோபா பாவேநமது
தேசநன்மை நாடினார்
வையமெங்கும் பெருமைபெற்ற
வண்மைமிக்கத் தமிழகம்
வந்துபூமி தானம்வாங்க
வரவுசொல்லி வாழ்த்துவோம்.

கருணைவாழ்வின் அருணனான
காந்திசீடன் வருகிறார்
கால்நடந்து ஊர்கள்தோறும்
கைகுவிக்கப் பெறுகிறார்
தருணமீது தமிழகத்தின்
தனிமையாகும் வண்மையைத்
தங்கிப்பூமி தானமீந்து
தர்மவேள்வி பண்ணுவோம்.

வாழ்கவாழ்க காந்திநாமம்
என்றும்நின்று வாழ்கவே
வந்துதித்த நம்விளைப
வாய்மையாளன் வாழ்கவே
வாழ்கபூமி தானம்செய்யும்
வண்மைபோற்றும் யாவரும்
வாழ்கசாந்த சத்தியத்தில்
வந்தநம் சுதந்திரம்.

## எது வேண்டும்.

எதுஉனக்கு வேண்டுமென்று
எண்ணிப்பார்த்துச் சொல்லடா
மதிமிகுந்த மனிதஜன்ம
மகிமைகாத்து நில்லடா!

ஞானமுள்ள நாடிதென்று
பேர்நிலைத்தல் வேண்டுமா?
சேனைகொண்டு சென்றுகொன்று
சீர்குலைத்தல் வேண்டுமா?

தந்திரத்தை வெல்லும்தூய்மை
தாங்கநிற்க வேண்டுமா?
எந்திரத்தின் அடிமையாகி
ஏங்கிநிற்க வேண்டுமா?

அறிவுகொண்டு மக்களுக்கு
அன்புசெய்தல் வேண்டுமா?
செறிவுகொண்ட சக்திபெற்றுச்
சேதம்செய்தல் வேண்டுமா?

வெள்ளையாகத் தீமையை
எதிர்த்துவெல்ல வேண்டுமா?
கள்ளமாய் மறைந்துசெய்யும்
காரியங்கள் வேண்டுமா?

அன்புசொல்லித் தீமையை
அடக்கியாள வேண்டுமா?
வம்புபேசித் தீமையை
வளர்த்துவைக்க வேண்டுமா?

சத்தியத்தின் பற்றுகொண்ட
சாந்தவாழ்வு வேண்டுமா?
மற்றசெய்து மனிதமேன்மை
மாய்ந்துபோக வேண்டுமா?

தீரமாகப் பொறுமைகாட்டும்
திறமடுக்க வேண்டுமா?
வீரமென்று கோபமூட்டும்
வெறிபிடிக்க வேண்டுமா?

ஆசையற்ற சேவைசெய்யும்
நேசவேலை வேண்டுமா?
தேசபக்தி மாசுகொள்ளும்
நாசவேலை வேண்டுமா?

தெய்வம்உண்டு என்றுநம்பும்
தேசபக்தி வேண்டுமா?
பொய்யும்போரும் புனிதமென்று
பேசும்புத்தி வேண்டுமா?

வலியப்பூமி தானம்செய்து
வாழ்த்துகொள்ள வேண்டுமா?
வலிமைவந்து நம்மைத்தாக்கி
வீழ்த்திக்கொல்ல வேண்டுமா?

★

## யார் தொண்டன்.

தொண்டுசெய்யக் கற்றவன்
துயரம்போக்கும் உற்றவன்
சண்டைபோடும் மக்களை
சரசமாக்கி வைக்கவே. (தொ)

தீரவாழ்வு சொல்லுவான்
தீமையாவும் வெல்லுவான்
ஈரமற்ற செய்கைகள்
வீரமென்றல் பொய்யென (தொ)

சேவைசெய்யும் நல்லவன்
செம்மைகண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச்சென்று சேருவான் (தொ)

அன்பினைப் பெருக்குவான்
ஆசையைச் சுருக்குவான்
துன்பமுற்ற எவரொடும்
துணையிருக்கத் தவறிடான் (தொ)

பணிவுமிக்க தொண்டனே
பரமஞானம் கண்டவன்
தணிவுமிக்க சொல்லினால்
தரணிஎங்கும் வெல்லுவான் (தொ)

கூடவிடாமல் ஓடுவான்
குறைகள்தீர்க்க நாடுவான்
ஏவிடாத தொண்டனே
எதிலும்வெற்றி கொண்டவன் (தொ)

கடவுளென்ற சக்தியைக்
    கருதிடாத பித்தரின்
மடமைநீக்கும் சேவைதான்
    மனிதர்க்கின்று தேவையாம் (தொ)

பூமிதான போதகன்
    பூஜிதன் விநோபா
புதுமைமிக்க தொண்டுதான்
    போற்றவேண்டும் இன்றுநாம் (தொ)

★

## அமிழ்தத் தமிழ் மொழி.

பல்லவி

அமிழ்தம்எங்கள் தமிழ்மொழி
அன்னைவாழ்க வாழ்கவே

வையகத்தில் இணையிலாத
வாழ்வுகண்ட தமிழ்மொழி
வானகத்தை நானிலத்தில்
வரவழைக்கும் தமிழ்மொழி
பொய்அகந்தை புன்மையாவும்
போக்கவல்ல தமிழ்மொழி
புண்ணியத்தை இடைவிடாமல்
எண்ணவைக்கும் தமிழ்மொழி

மெய்வகுத்த வழியிலன்றி
மேவும்எந்தச் செல்வமும்
வேண்டிடாத தூயவாழ்வைத்
தூண்டுகின்ற தமிழ்மொழி
தெய்வசக்தி என்றஒன்றைத்
தேடித்தேடி ஆய்ந்தவர்
தெளிவுகண்ட ஞானவான்கள்
சேகரித்த நன்மொழி.

உலகிலுள்ள மனிதர்யாரும்
ஒருகுடும்பம் என்னவே
ஒன்றுபட்டு வாழும்மார்க்கம்
தொன்றுதொட்டுச் சொன்னது

கலகமற்று உதவிமிக்க
　　சமுகவாழ்வு கண்டது
கடமைகற்று உடமைபெற்ற
　　கர்மஞானம் கொண்டது.

சலுகையோடு பிறமொழிக்கும்
　　சரிசமானம் தருவது
சகலதேச மக்களோடும்
　　சரசமாடி வருவது
இலகும்எந்த வேற்றுமைக்கும்
　　ஈசன்ஒன்று என்பதை
இடைவிடாமல் காட்டும்எங்கள்
　　இனிமையான தமிழ்மொழி

கொலைமறுக்கும் வீரதீரக்
　　கொள்கைசொல்லும் பொன்மொழி
கொடியவர்க்கும் நன்மைசெய்யக்
　　கூறுகின்ற இன்மொழி
அலைமிகுந்த வறுமைவந்து
　　அவதியுற்ற நாளிலும்
ஐயமிட்டு உண்ணுகின்ற
　　அறிவுசொல்லும் தமிழ்மொழி

கலைமிகுந்த இன்பவாழ்வின்
　　களிமிகுந்த பொழுதிலும்
கருணைசெய்தல் விட்டிடாத
　　கல்விநல்கும் மொழியிது

நிலைதளர்ந்து மதிமயங்க
நேருகின்ற போதெலாம்
நீதிசொல்லி நல்லொழுக்கம்
பாதுகாக்கும் தமிழ்மொழி

அன்புசெய்து, அருள் அறிந்து,
ஆற்றல்பெற்ற அறமொழி
அறிவறிந்து திறமையுற்ற
அமைதிமிக்கத் திருமொழி
இன்பமென்ற உலகறிந்த
யாவுமுள்ள கலைமொழி
இறைவனோடு தொடர்பறுமல்
என்றுமுள்ள தென்றமிழ்

துன்பமுற்ற யாவருக்கும்
துணையிருக்கும் தாயவள்
துடிதுடித்து எவ்வுயிர்க்கும்
நலமளிக்கும் தூயவள்
தெம்புதந்து தெளிவுசொல்லும்
தெய்வமெங்கள் தமிழ்மொழி
திசைகளெட்டும் வாழ்த்துகின்ற
இசைபரப்பச் செய்குவோம்

பழிவளர்க்கும் கோபதாப
க்ரோதமற்ற பான்மையும்
பகைவளர்க்கும் ஏகபோக
ஆசையற்ற மேன்மையும்

அழிவுசெய்யக் கருவிசெய்யும்
ஆர்வமற்ற எண்ணமும்
அனைவருக்கும் நன்மைகாணும்
வித்தைதேடும் திண்ணமும்

மொழிவளர்ச்சி யாக்குமென்ற
உண்மைகண்டு முந்தையோர்
முறைதெரிந்து சேர்த்ததிந்த
நிறைமிகுந்த முதுமொழி
வழியறிந்து நாமும்அந்த
வகைபுரிந்து போற்றுவோம்
வஞ்சமிக்க உலகவாழ்வைக்
கொஞ்சமேனும் மாற்றுவோம்.

★

## அன்பு

அன்புஎன்ற ஒன்றைநாம்
அறிந்துகொள்ளக் கூடுமேல்
துன்பம்என்ற யாவையும்
தூரமாக ஓடுமே
வம்புவாது வார்த்தைமுற்றும்
வாயடங்கிப் போகுமே
இன்பமாக நாமெலாம்
இங்கிருந்து வாழலாம்.

ஜாதிபேதச் சண்டையும்
சமயபேதக் கொடுமையும்
மோதிமோதி மக்கள்தம்மை
மூடராக்கும் மடமையும்
நாதியற்றுப் போகுமிந்த
நானிலத்தின் மீதிலே
ஆதிநாள்நம் அன்னைசெய்த
அன்பை எண்ணும்போதிலே.

அன்புகொண்ட பேர்களுக்கு
அச்சமில்லை எங்கணும்
முன்புஎன்றும் கண்டிராத
மூர்க்கரோடும் தங்கலாம்
துன்பமுற்ற மக்கள்யாரும்
துணைவரென்று போற்றவே
செம்புகொண்ட தங்கமென்ன
சொந்ததீமை மாற்றுவார்.

வெல்லவந்த சேனைகூட
வேகமற்ற தாகுமே
கொல்லும்வேலும் வாளுங்கூடக்
கூர்மழுங்கிப் போகுமே
கல்லுங்கூடப் புல்லைப்போலக்
கனிவுகொண்டு காணுமே
சொல்லுமிந்த அன்பைமட்டும்
சுத்தமாகப் பேணினல்.

கூழுமின்றிக் குடிசையின்றிக்
கோடிகோடி உலகினில்
ஏழைமக்கள் பரதவித்து
ஏங்கநேரும் கலகமும்
கோழைபட்ட செல்வம்செய்யும்
கொடுமைமுற்றும் குறையுமே
வாழிஇந்த அன்புமட்டும்
வையமெங்கும் நிறையுமே.

பஞ்சமென்ற ஏக்கமும்
பகைமையென்ற கொச்சையும்
நஞ்சையொத்த கோபமும்
நாசமூட்டும் இச்சையும்
கெஞ்சிநின்று சோறுதின்னும்
கீழ்மையான எண்ணமும்
அஞ்சிஅஞ்சி அன்பினுக்கு
அடிமைவேலை பண்ணுமே.

முக்திஎன்ற ஆசையும்
மோட்சமென்று பேசலும்
பக்திஎன்ற பாசமும்
பரமன்என்ற நேசமும்
சத்தியத்தின் மேன்மையும்
சாந்திஎன்ற வெற்றியும்
அத்தனைக்கும் மூலமாம்
அன்புஎன்ற ஒன்றுதான்.

போழ்ந்துநம்மை நீக்கிவைக்கும்
பேதபுத்தி போகவும்
சூழ்ந்துநின்று மதிகெடுக்கும்
சூதுபொய்கள் ஏகவும்
ஆழ்ந்தகல்வி யின்றிக்கூட
அன்புஎன்ற ஒன்றினுல்
வாழ்ந்திருக்க லாகும்அன்பு
வளர்க, வாழ்கஎன்றுமே.

நேயமற்ற மதவெறிக்கு
நிலையமான தேசமாம்
பேயுங்கூட நடுநடுங்கிப்
பேதளித்துக் கூசுமாம்
நாய்நரிக்கும் அச்சமூட்டும்
நவகளிக்குள் காந்தியார்
போய்நடந்த யாத்திரைக்குள்
புனிதஅன்பு சேர்ந்ததாம்,

தெய்வமென்று உலகம்நித்தம்
தேடுகின்ற ஒன்றுதான்
வையகத்தில் அன்புஎன்ற
வார்த்தையாகி நின்றதே
ஐயன்எங்கள் காந்திவாழ்வின்
அற்புதத்தை நாடியே
மெய்யுணர்ந்து அன்புசொல்லும்
மேன்மையாவும் கூறுவோம்.

★

## பொங்குக புதுவளம்

பொங்குக பொங்கல் பொங்குகவே
பொங்குக புதுவளம் பொங்குகவே
திங்களில் மும்முறை மழைபொழிய
தினம்இது முதல்நம் குறைஒழிய
மங்குக போர்வெறி மாச்சரியம்
மதவெறி நிறவெறி தீச்செயல்கள்
தங்குக சத்திய சன்மார்க்கம்
தரணியில் மாந்தர்கள் எல்லார்க்கும் (பொங்குக)

மானில உயிர்கள் நலமுறவும்
மக்கள் உடல்வளம் பலமுறவும்
ஞானமும் கல்வியும் சிறந்திடவும்
நல்லன உணர்ச்சிகள் நிறைந்திடவும்
தானியக் கதிர்வளம் உயர்ந்திடவே
தக்கன உழவுகள் முயன்றிடுவோம்
போனது உணவுப் பஞ்சமென
புதுவளம் எங்கணும் மிஞ்சிடவே (பொங்குக)

இயற்கையின் வளம்பல இருந்தாலும்
இன்பம் யாவையும் பொருந்தாது
செயற்கைப் பொருள்கள் சேராமல்
சிறப்புள வாழ்வெனும் பேராமோ?
வியக்கும் பொருள்களைச் செய்திடுவோம்
வேண்டிய திறமைகள் எய்திடுவோம்
நயக்கும் தொழில்பல பெருகவென
நமக்கதில் ஊக்கம் வருகவென (பொங்குக)

உழவும் தொழிலும் மலிந்துவிடில்
ஊரில் செல்வம் பொலிந்துவிடும்
விழவும் தினந்தினம் விருந்துகளும்
வீட்டிலும் நாட்டிலும் இருந்துவரும்
பழகும் அன்னிய நாடுகளும்
பரிவுடன் எதையும் ஈடுதரும்
செழுமை பெற்றிடும் வாணிபங்கள்
சேமித் திடுவோம் நாணயங்கள் (பொங்குக)

பொலிவுறச் செல்வம் சேர்ந்தஉடன்
புதுப்புது உணர்ச்சிகள் ஊர்ந்துவரும்
இலகிய வாழ்க்கையில் இச்சைதரும்
இன்பச் செயல்களை மெச்சவரும்
நலிதரும் ஆசையை ஓட்டுவதாய்
நன்னெறி இன்பம் ஊட்டுவதாய்
கலைகள் யாவையும் திகழ்ந்திடவும்
கண்டவர் கேட்டவர் புகழ்ந்திடவும் (பொங்குக)

கொள்ளை கொள்ளை தானியமும்
கோரும் பலதொழில் மானியமும்
வெள்ளிபொன் செல்வம் மிகுந்திடினும்
வேண்டிய கலைத்திறம் திகழ்ந்திடினும்
கள்ளமும் பொய்யும் அமிழ்ந்திடவும்
கருணை நறுமணம் கமழ்ந்திடவும்
உள்ளம் மலர்ந்திடல் இல்லாமல்
உண்மை வளமெதும் நில்லாது (பொங்குக)

தனிநா யகன்ஒரு பரம்பொருளாம்
தரணியை ஆள்வது அவன்அருளாம்
மனநா யகம்இதில் மலர்ந்துவிடில்
மற்றுள வேற்றுமை உலர்ந்துவிடும்
ஜனநா யகமுறை ஓங்கிவிடும்
சச்சர வென்பன நீங்கிவிடும்
இனமாய் யாவரும் வாழ்ந்திடலாம்
இன்பப் புதுவளம் சூழ்ந்திடவே (பொங்குக)

★

## உத்தமன் காந்தி

உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா.

சித்தம் குளிர்ந்துள பித்தம் தெளிந்திடும்
சீரியன் காந்தியின் பேர் சொன்னால்
புத்தம் புதியன முற்றும் இனியன
பொங்கிடும் உணர்ச்சிகள் எங்கிருந்தோ.

கிளர்ச்சிகொண் டான்மா பளிச்சென மின்னுது
கிழவன் காந்தியின் பழமை சொன்னால்
தளர்ச்சிகள் நீங்கிய வளர்ச்சியில் ஓங்கிய
தாட்டிகம் உடலில் கூட்டுதடா.

சோற்றையும் வெறுக்குது காற்றையும் மறக்குது
சுத்தனக் காந்தியின் சக்தி சொன்னால்
கூற்றையும் வெருட்டிடும் ஆற்றலைத் திரட்டிடக்
கூடுதடா மனம் தேடுதடா.

தூக்கமும் கலைந்தது ஏக்கமும் குலைந்தது
துன்பக் கனவுகள் தொலைந் ததடா
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளலக் காந்தியின் நினைப்பாலே.

வஞ்சனை நடுங்கிடும் வெஞ்சினம் அடங்கிடும்
வாய்மையன் காந்தியின் தூய்மை சொன்னால்
அஞ்சின மனிதரும் கெஞ்சுதல் இனியில்லை
ஆண்மையும் அன்பும் அருளுமடா.

ஜீவர்கள் உலகுள யாவரும் சமமென
செய்கையில் காட்டிய காந்தியடா.
பாவமும் பழிகளும் தீவினை வழிகளும்
பதுங்குமடா கண்டு ஒதுங்குமடா.

எழுபதும் ஐந்தும் சூழகுழ வயசினில்
என்னே! காந்தியின் இளமையடா!
முழுவதும் அதிசயப் பழுதறு வாழ்க்கையின்
முத்தனடா பெரும் சித்தனடா.

காந்தியின் தவக்கனல் சூழ்ந்தது உலகினைக்
காம தகனமென எரிக்குது பார்
தீய்ந்தன சூதுகள் ஓய்ந்தன வாதுகள்
திக்குத் திசையெல்லாம் திகைத்திடவே.

ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழ்ந்திடவே.

★

## கவி தாகூர்

கலைமகள் கண்ணீர் சோரக்
கவிமகள் கலங்கி வீழத்
தலைமகன் இறந்தா னென்று
இந்தியத் தாய் தவிக்க
அலைகடற் கப்பா லுள்ள
அறிஞர்கள் யாரும் ஏங்க
மலைவிளக் கவிந்த தென்ன
மறைந்தனன் கவிதா கூரே.

சந்திரன் கிரணத் தோடு
சூரியன் ஒளிசேர்ந் தென்ன
செந்தணல் நெருப்பில் நல்ல
சிலுசிலுப் பிணைந்த தென்ன
அந்தணர் அமைதி யோடே
அரசரின் ஆண்மை கூட்டும்
சுந்தரக்கவிகள் பாடும் சொல்வள
முடையோன் தாகூர்.

கருணையின் உருவு காட்டும்
கவிரவீந் திரநாத் தாகூர்
அருணனாய் உலகுக் கெல்லாம்
அறிவொளி பரப்பி வாழ்ந்தான்
மருணெறி மாற்ற இந்த
மாநில மக்கட் கெல்லாம்
பொருணெறி சாந்தி சொல்லும்
புத்தக மாக நிற்பான்.

அரசியல் போராட் டத்தில்
ஆழ்ந்திலன் என்றிட்டாலும்
புரைசெயும் அடிமை வாழ்வின்
புண்ணையே எண்ணி எண்ணி
கரைசெய முடிந்தி டாத
கவலையால் கண்ணீர் பொங்க
உரைசொலி அடிமைக் கட்டை
உடைத்திடத் துடித்தோன் தாகூர்.

'ஒத்துழை யாமை' என்று
காந்தியார் உரைக்கும் முன்னுல்
இத்துரைத் தனத்தா ரோடு
இணங்கிடப் பிணக்கி விட்டோன்
பற்றுகள் அவர்முன் தந்த
பட்டமும் பரிசும் வீசிச்
சுத்தியை முதலிற் செய்த
சுதந்திர தீரன் தாகூர்.

காந்தியும் 'குருதேவ்' என்று
கைகுவித் திறைஞ்சும் தாகூர்
மாந்தருள் பல நாட்டாரும்
மதங்களும் மருவி வாழ்ந்து
சேர்ந்தநல் லறிவை அன்பை
செகமெலாம் பரப்ப வென்றே
'சாந்திநி கேதன்' என்ற
சமரசச் சங்கம் தந்தோன்.

கலைகளின் வழியே தெய்வக்
　　கருணையைக் காண்ப தென்றும்
நிலையினைப் படிக்க வென்னும்
　　நிருவிய நிலையம் ஈதாம்
சிலைதரல் ஆடல் பாடல்
　　சித்திரம் நடிப்ப ரங்கம்
பலவித வித்தை எல்லாம்
　　பயிலுதற் கிடமாய் நிற்கும்.

தாய்மொழிப் பற்றும் தங்கள்
　　கலைகளைத் தாங்கி நிற்கும்
ஆய்மையும் வங்காளிக்கு
　　அதிகமாம் அதினல் எல்லாச்
சீமையும் தாகூர் பாட்டைச்
　　சிறப்புறப் பரப்பினர்கள்
வாய்மையைத் தமிழர் போற்றி
　　வளர்ப்பரோ தமிழன் மேன்மை.

★

## வீரத் துறவி.

ஆண்மை உருக்கொண்ட அந்தணன் — எங்கள்
அண்ணல் விவேகா னந்தனின்
மாண்பை அளந்திட எண்ணினுல் — இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்.

காமனைப் போன்ற அழகினுன் — பொல்லாக்
காமத்தை வென்று பழகினுன் ;
சோமனைப் போல குளிர்ந்தவன் — ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன்.

வீரத் துறவறம் நாட்டினுன் — திண்ணை
வீணர்வே தாந்தத்தை ஓட்டினுன்;
தீரச் செயல்களை நாடினுன் — இந்தத்
தேச நிலைகண்டு வாடினுன்.

கர்மத் தவநெறி காட்டினுன் — நல்ல
காரியம் வீரியம் ஊட்டினுன் ;
மர்மம், பலிதரும் பூசைகள் — ஹிந்து
மதமல்ல என்றுண்மை பேசினுன்.

'உலகை வெறுத்துத் துறந்தவர் — தெய்வ
உள்ளக் கருத்தை மறந்தவர்
கலக நடுவிலும் தங்குவேன்' - என்று
கர்ஜனை செய்திட்ட சிங்கமாம்.

பெண்ணின் பெருமையைப் போற்றினுன்-ஆண்கள்
பேடித் தனங்களைத் தூற்றினுன்
மண்ணின் சுகங்களை விட்டவன் - ஏழை
மக்களுக்காய் கண்ணீர் கொட்டினுன்.

ஏழையின் துன்பங்கள் போக்கவும் –அவற்கு
எண்ணும் எழுத்தறி வாக்கவும்
ஊழியம் செய்வது ஒன்றுதான் - தேவை
உண்மைத் துறவறம் என்றுளான்.

தேசத் திருப்பணி ஒன்றையே - உண்மை
தெய்வத் திருப்பணி என்றவன் ;
மோசத் துறவுகள் போக்கினுன் - பல
மூடப் பழக்கத்தைத் தாக்கினுன்.

அடிமை மனதை அகற்றினுன் - உயர்
அன்பின் உறுதி புகட்டினுன்
கொடுமை அகற்றிட முந்திடும் - தவக்
கூட்டத்தை நாட்டுக்குத் தந்தவன்

ஐம்பது ஆண்டுகள் முன்னமே செல்வ
அமெரிக்கச் சிக்காகோ தன்னிலே
நம்பெரும் இந்திய நாட்டவர் - கண்ட
ஞானப் பெருமையைக் காட்டினுன்.

வெள்ளையர் பாதிரி மாரெல்லாம் - கேட்டு
வெட்கித் தலை குனிந்தார்களே !
தெள்ளிய ஞானத்தைப் போதித்தான் - அவர்
திடுக்கிட உண்மைகள் சாதித்தான்.

சத்திய வாழ்க்கையைப் பேசினுன் - அருள்
சாந்தத் தவக்கனல் வீசினுன்;
யுத்தக் கொடுமையைச் சிந்திப்போம் - அந்த
உத்தமன் சொன்னதை வந்திப்போம்.

★

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

முன்னையோர் நமது நாட்டின்
  முனிவரர் தேடி வைத்த
முழுமுதல் ஞான மெல்லாம்
  மூடநம்பிக்கை யென்றும்
பொன்னையே தெய்வ மென்றும்
  போகமே வாழ்க்கை யென்றும்
மனிதரைக் கொன்று வீழ்த்தும்
  போரையே வீரமென்றும்
தன்னையே பெரிதா யெண்ணித்
  தனக்குமேல் இருக்கும் வேறோர்
சக்தியின் நினைப்பே யின்றித்
  தருக்கியே பிறப்பின் மாண்பைத்
தின்னுமோர் மயக்கம் நீங்கித்
  தெளிந்திட எழுந்த ஞானத்
தீபமே ராம கிருஷ்ண
  தேவனே போற்றி போற்றி.

மனிதரின் பாவம் போக்க
  மகிழ்ச்சியோ டுயிரைத்தந்த
மாபெரும் த்யாக மூர்த்தி
  ஏசுவின் அன்பாம் நெய்யை
தனிவரும் துறவி யென்று
  தரணியோர் யாரும் போற்றும்
சாந்தனும் புத்த தேவன்
  தவமெனும் தட்டில் ஊற்றி

இனியொரு மனிதர்க் கில்லை
    இத்தனை பொறுமை யென்னும்
எம்பிரான் மஹமத் நீட்டும்
    சமரசக் கைகள் ஏந்த
சினமெனும் அரக்கர் கூட்டம்
    திரியென எரியும் ஞான
தீபமே ராம கிருஷ்ண
    தேவனே போற்றி போற்றி.

பேயென்றும் மாயை யென்றும்
    பெண்களை இகழ்ந்து பேசிப்
பெருந்துற வடைந்த பேரும்
    பிழைபுரிந் தவரே யன்றோ!
தாயென்றும் துணைவி யென்றும்
    தன்னுடை நோக்கம் காக்கும்
சகதர்ம சக்தி யென்றும்
    சாரளா தேவி தன்னை
நீ யென்றும் மகிழ்ந்துகொண்ட
    நிர்மல வாழ்க்கை தன்னை
நினைத்திடுந் தோறும் நெஞ்சம்
    நெக்குநெக் குருகும் ஐயா
தீயென்னப் புலனைக் காய்ந்த
    தீரனே ஞான வாழ்வன்
தீபமே ராம கிருஷ்ண
    தேவனே போற்றி போற்றி.

'ஜாதியில் உயர்ந்தோம்' என்னும்
சனியனும் அகந்தை நீங்கத்
தாழ்ந்தவர் குடிசை தோறும்
தலையினால் பெருக்கி வாரும்
சேதியைத் தெரிந்து அன்னார்
திகைத்துனைத் தடுத்ததாலே
தெரியாமல் இரவிற் சென்று
தினந்தினம் அதையே செய்து
ஆதியின் அருளைத் தேடும்
அந்தணர்க் கரசே! ஐயா
ஆணவம் அமிழ்ந்தா லன்றி
ஆண்டவன் அணுகான் என்றாய்
தீதுகள் உலகில் நீங்கித்
திக்கெலாம் ஒளிரும் ஞான
தீபமே ராம கிருஷ்ண
தேவனே போற்றி போற்றி.

★

## ஜவஹர்லால் நேரு

மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி
மலைமலையாப் பிணக்குவியல் குவித்ததாலே
மன்னரெனப் பலர்வணங்கத் தருக்கி வாழ்ந்தோர்
மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்
தன்னுயிரை மன்னுயிர்க்கே தத்தம் செய்து
தருமநெறி தவறாத தன்மைக்காக
இன்னுயிர்கள் மனங்குளிர்ந்து இளங்கோ என்று
எதிர்கொள்ளும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே.

பணம்படைத்த சிலபேர்கள் தனியே கூடிப்
பட்டாளம் சுற்றிநின்று பாரா செய்ய
மணம்படைத்தாம் வரவளிக்க மகிழ்ந்து போகும்
மன்னரென்பார் எத்தனையோ பேர்கள் உண்டு
குணம்படைத்துக் கருணைமிகும் கொள்கைக்காகக்
கோடானு கோடிமக்கள் எங்கும் கூடி
'கணம்பொறுங்கள் கண்டாலும் போதும்' என்று
களிசிறக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே.

எச்சிலுண்ணும் சிறுமனத்தார் பலபேர் கூடி
இல்லாத பெருமைகளை இசைத்துக் கூறும்
இச்சகத்தால் மதிமயங்கி இறுமாப் புற்ற
இருள்மனத்தார் எத்தனையோ அரசர் கண்டோம்
மெச்சுகின்ற பிறர்மொழியை மிகைசெய் யாமல்
மெய்யறிவும் பொய்வெறுப்பும் துணையாய் மேவ
அச்சமற்ற நல்லொழுக்கம் அதற்கே மக்கள்
ஆசைசெய்யும் அரசனெங்கள் ஜவஹர் லாலே.

ஆயுதத்தின் அதிகாரம் அதற்கே அஞ்சி
அடிபரவும் பலபேர்கள் அருகே சூழப்
பேயுதித்துக் கொலுவிருக்கும் பெற்றி யேபோல்
பிறர்நடுங்க அரசாண்டார் பலபேர் உண்டு
போயுதித்த இடங்களெல்லாம் புதுமை பூட்டிப்
புதையல்வந்து கிடைத்ததுபோல் பூரிப்பெய்தித்
தாயெதிர்ந்த குழந்தைகள்போல் ஜனங்கள் பார்க்கத்
தாவிவரும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே.

ஏழைகளின் குடிமுழுக வரிகள் வாங்கி
இந்திரியச் சொந்தசுகங் களுக்கே வீசிக்
கோழையராய் பிறர்உழைப்பில் கோலங் கொள்ளும்
கோமான்கள் குவலயத்தில் பலபேர் உண்டு
வாழையைப்போல் பிறர்க்குதவி வருத்தம் தாங்கி
வறியவர்க்கே கனிந்துருகும் வரிசைக்காக
வாழிஜவார் வாழிஜவார் வாழி யென்று
வாழ்த்திசைக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே.

★

## கம்பனும் வால்மீகியும்.

கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்த
திரையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டித்
திறமிகுந்த கால்வய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
தனிப்புலமைக் கம்பனெனும் கவிதைத் தச்சன்
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

வனத்திலுள்ள மலர்வகைகள் எல்லாம் கொய்து
வாசனைவேர் பச்சிலைகள், பலவும் சேர்த்து
கனத்தஒரு பூப்பொதியாம் ராமன் காதை
வான்மீகி யெனும்தவசி கட்டோ டீந்தான்
இனத்தையெல்லாம் ஆய்ந்தறிந்து இணைத்துக் கோத்து
இடைகிடந்த மாசுமரு யாவும் நீக்கி
தனித்தமணம் அறந்திகழும் மாலை யாக்கித்
தரணிக்கே சூட்டிவைத்தான் கம்பன்தானே.

மால்கடிந்த தவமுனிவான் மீகிஎன்பான்
வனத்தினிடையே தான்கண்டு கொண்டு வந்த
பால்படிந்து, முள்ளடர்ந்து, பருத்து, நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக் கீந்தான்
மேல்படிந்த பிசினகற்றி, மெள்ளக் கீறி
மெதுவாகச் சுளைஎடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்.

★

## இயேசு கிறிஸ்து.

தூயஞான தேவன்தந்தை பரமன்விட்ட தூதனாய்
துன்பம்மிக்க உலகினுக்கு அன்புமார்க்க போதனாய்
மாயமாக வந்துதித்து மறிகள்சேரும் பட்டியில்
மானிடக் குழந்தையாக மேரிகண்ணில் பட்டவன்
ஆயனாக மனிதர்தம்மை அறிவுகாட்டி மேய்த்தவன்
அன்புஎன்ற அமிர்தநீரின் அருவிகாண வாய்த்தவன்
நேயமாக மாந்தர்வாழ நெறிகொடுத்த ஐயனும்
நித்தமந்த ஏசுநாதன் பக்திசெய்து உய்குவோம்.

நல்லஆயன்; மந்தைபோக நல்லபாதை காட்டினான்
நரிசிறுத்தை புலிகளான கோபதாபம் ஓட்டினான்
கல்லடர்ந்து முள்நிறைந்து கால்நடக்க நொந்திடும்
காடுமேடு யாவும்விட்டுக் கண்கவர்ச்சி தந்திடும்
புல்லடர்ந்து பசுமைமிக்க பூமிகாட்டி மேய்த்தவன்
புத்திசொல்லி மெத்தமெத்தப் பொறுமையோடு காத்தவன்
கொல்லவந்த வேங்கைசிங்கம் கூசநின்ற சாந்தனும்
குணமலைக்குச் சிகரமான ஏசுதேவ வேந்தனே.

ஏசுநாதன் என்றபேரை எங்கிருந்து எண்ணினும்
ஏழைமக்கள் தோழனாக அங்குநம்மை நண்ணுமே
தேசுமிக்க த்யாகமேனி தெய்வதீப ஜோதியாய்
தீமையான இருளைநீக்கி வாய்மைஅன்பு நீதியாய்
பாசமாகப் பரிவுகூறிப் பக்கம்வந்து நிற்குமே
பகைவருக்கும் அருள்சுரக்கும் பரமஞானம் ஒக்குமே
ஈசனோடு வாழவைக்கும் ஏசுபோத இச்சையை
இடைவிடாத யாவருக்கும் எதிலும்வெற்றி நிச்சயம்!

★

## உ. வெ. சாமிநாத ஐயர்.

பேச்செல்லாம் தமிழ்மொழியின் பெருமைபேசி
பெற்றதெல்லாம் தமிழ்த்தாயின் பெற்றியென்று
மூச்செல்லாம் தமிழ்வளர்க்கும் மூச்சேவாங்கி
முற்றும்அவள் திருப்பணிக்கே மூச்சைவிட்டான்
தீச்சொல்லும் சினமறியாச் செம்மைகாத்தோன்
திகழ்சாமி நாதஐயன் சிறப்பையெல்லாம்
வாய்ச்சொல்லால் புகழ்ந்துவிடப் போதாதுண்மை
மனமாரத் தமிழ்நாட்டார் வணங்கத்தக்கோன்.

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவேயாக
அலைந்தலைந்து ஊரூராய்த் திரிந்துநாடி
செல்லரித்த ஏடுகளைத் தேடித்தேடி
சேகரித்துச் செறுகலின்றி செப்பம்செய்து
சொல்லரிய துன்பங்கள் பலவும்தாங்கி
சோர்வறியா துழைத்தஒரு சாமிநாதன்
இல்லையெனில் அவன்பதித்த தமிழ்நூலெல்லாம்
இருந்தஇடம் இந்நேரம் தெரிந்திடாதே.

சாதிகுலப் பிறப்புகளாற் பெருமையில்லை
சமரசமாம் சன்மார்க்க உணர்ச்சியோடு
ஓதிஉணர்ந் தொழுக்கமுள்ளோர் உயர்ந்தோர்என்னும்
உண்மைக்கோர் இலக்கியமாய் உலகம்போற்ற
ஜோதிமிகும் கவிமழைபோல் பொழிமீனாட்சி
சுந்தரனும் தன்குருவைத் தொழுதுவாழ்த்தி
வேதியருள் நெறிபிசகாச் சாமிநாதன்
விரித்துரைக்கும் சரித்திரமே விளங்கிநிற்கும்.

மால்கொடுத்த பிறமொழிகள் மோகத்தாலே
மக்களெல்லாம் பெற்றவளை மறந்தார்; ஞானப்
பால்கொடுத்த தமிழ்த்தாயார் மிகவும்நொந்து
பலமிழந்து நிலைதளர்ந்த பான்மைபார்த்து
கோல்கொடுத்து மீட்டுமவள் கோயில்சேர்த்து
குற்றமற்ற திருப்பணிகள் பலவும்செய்து
நூல்கொடுத்த பெருமைபல தேடித்தந்த
நோன்பிழைத்த தமிழ்த்தவசி சாமிநாதன்.

★

## தமிழ் நாடு வாழ்க!

வீரத்தில் நிறைவான
தமிழ் நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான
தமிழ் நாடு வாழ்க!
சூரத்தின் துணையான
தமிழ் நாடு வாழ்க!
துஷ்டர்க்குப் பணியாத
தமிழ் நாடு வாழ்க!

வாள் கொண்டு நேர் நின்று
போர் தந்த போதும்
வஞ்சங்கள் புரியாத
தமிழ் நாடு வாழ்க!
கோள் கொண்டு பொய் சொல்லி
குற்றேவல் செய்யா
குணமிக்க ஜனமிக்க
தமிழ் நாடு வாழ்க!

கொல்லாமை உயர்வென்னும்
தமிழ் நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர் நின்ற
தமிழ் நாடு வாழ்க!
இல்லாமை அறியாத
தமிழ் நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும்
தமிழ் நாடு வாழ்க!

படையாமல் உண்ணுதை
தமிழ் நாடு வாழ்க!
பகையாரும் எண்ணுதை
தமிழ் நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள்
அவை வந்த போதும்
அநியாயம் எண்ணுதை
தமிழ் நாடு வாழ்க!

★

12726
O31:1M88;c
J6
UNIVERSITY EXTENSION LIBRA
14 AUG 1960